


பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 NA-3 இதழ் 18

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
ஐப்பசித் திங்கள் 9-ம் நாள்

விலை அணா 5
25—10—49

தடை செய்யாதீர்!


வாலாட்டும் வைதிகத்தின் வால்நறுக்கி
வாழ்வினுக்கு வழிகாட்டும் பணிகைக்கொண்டோம்!
தாலாட்டித் துடைகிள்ளும் தன்மைகொண்டு
தான்தருக்கித் தென்னாட்டைத் தாழ்த்துகின்ற
கோலாட்டக் காரர்களாம் வடநாட்டாரின்
கொக்கரிப்பை யடக்குகின்ற குறிமேற்கொண்டோம்!
பாலாடைக் குழவிகள்யாம் முயலுகின்றோம்!
பழிகூறிப் பெரியாரே! தடைசெய்யாதீர்!

சகதியெனுஞ் சாதிமதக் கடவுள்மூடச்
சந்தையெனுங் கும்மிருட்டு வீறிட்டோடத்
திகழ்ந்தவிடி வெள்ளியெனும் ஈரோட்டண்ணல்!
தீட்டியருங் கொள்கையொடு முன்னேறிப்போய்ப்
பகலவனைத் தோற்றிடுபுத் தியக்கந்தன்னைப்
பனிமூட்ட முக்காட்டால் மறைக்கின்றீரே!
பகலவனின் முன்னரென்ன பனியின்சேதி?
பகுத்தறிவுத் தந்தையரே; பதிலாதேவை!

"காலுதறி யுடல்பதறிச் சாம்புமூடக்
கருத்துகளை முறித்துப்பாய் புலியே!" என்று
வாலுருவி ஏவாமல் தடைசெய்கின்றீர்!
வஞ்சகத்தால், நெஞ்சறிந்த பொய்யால், ஏச்சால்
வாலறுந்த நரியாதல் பெரியாரென்னும்
வான்பெருமைக் கடுக்காது! வீழ்ச்சி நேரும்!
கோலூன்றுந் தந்தையரே! நும் வீழ்ச்சிக்குக்
குழவிகள்யாம் ஒப்பவில்லை; அதனாற் சொன்னோம்!

திருநாடாம் திராவிடத்தை உருப் படுத்தத்
திராவிடமுன் னேற்றமுறு கழகங் கண்டோம்.
பெரியாரே! திராவிடத்தின் பகையை மாய்க்கப்
பிளவுறுநாம் இணைக்கித்தாக் குதல் நடத்தி,
ஒருபுறத்தே அடித்துவந்த உரல் பகையை
இருபுறமும் அடித்தேமத் தளமாயாக்கித்
திருநாட்டைக் கண்டுவிடுஞ் செயல் விடுத்துத்
திடீர்ப்பழிகள் சுமத்தியெமைத் தடைசெய்யாதீர்!

— கோவை இளஞ்சேரன்



தமிழ் முதல் மொழியாம்!

காங்கிரஸ் சர்க்கார் தமிழுக்குச் செய்த 'தொண்டு'களில் குறிப் பிடத்தக்கது அதை 'முதல் மொழி'யாக்கியதாகும். கல்வி யமைச்சராய் விளங்கிய அவினாசிலிங்கனாரே இச் 'சிறப்பு' தமிழ் பெற மூல காரணமாவார்!

பள்ளிகளில் தாய்மொழி இம்மாறுதல் நடைமுறைக்கு வருமுன், இரண்டாம் மொழியாகவே இருந்துவந்தது; இன்னும் சொல்லப்போனால் 'அடிமைகளின்' மொழியாகவே நடத்தப் பட்டு வந்தது.

இக் கீழ்நிலை மாற வேண்டுமென எதிர்பார்த்தனர், தாய் மொழியின்பால் பற்றுக் கொண்டுள்ள அனைவரும். விடுதலை இந்தியாவுக்குக் கிடைத்த பின்னர், இந்நிலை மாற்றம் மிகமிக அவசியமென்று உணரப்பட்டது. தோழர் அவினாசிலிங்கம் அவர்களும், தாய்மொழிகட்கு இருந்த 'அவல நிலையைப்' போக்க முற்பட்டார். தாய்மொழி முதல் மொழியாகவும், முன்பு முதல் மொழியாக இருந்த ஆங்கிலத்தை மூன்றாவது மொழியாகவும் ஆக்கினார். தாய்மொழிக்கு முதல் மொழி என்ற சிறப்புப் பெயரை அளித்தார். தமிழகம் பெரிதும் மகிழ்ந்து வரவேற்றது.

இம்மாறுதல் தமிழுக்கு மாறாச் சிறப்பை வழங்கும் என அனைவரும் எண்ணினர்; எதிர்பார்த்தனர். தமிழ் இனிப் பள்ளிகளில் ஆட்சி செலுத்தும் என்று தமிழ்ப் புலவர்கள் கனவு கண்டனர். தமிழ்ப் புலவர்களே இனிப் பள்ளித் தலைமை ஏற்பர் என்று தமிழன்பர்கள் இறும்பூதெய்தினர். 'தமிழறியார் இனி எப்பதவிக்கும் உரியாரல்லர்' என்று தாய்மொழிப் பற்றுடையார் பேருவகை கொண்டனர்.

ஆனால் அவர்கள் நினைப்பில் மண் விழுந்தது. பெயர் மாற்றம் ஏற்பட்டதே தவிர நிலைமாற்றம் ஏற்படவில்லை. முன்பு, தமிழிருந்த நிலையினின்றும் ஒரு அங்குலம் கூட அது முன்னேறவில்லை. பள்ளிகளில் தமிழாசிரியர்களின் சம்பளம், அந்தஸ்து எல்லாம் முன்போலவே இருந்தன. பையன்கள் தமிழ்ப் படிப்பில் காட்டிய அக்கரையும் அதற்கேற்றாற் போலவே இருந்தது. ஆங்கிலம் பெயரை இழந்ததே தவிர, ஆட்சியை விடவில்லை; துணைக்கு இந்தியையும் சேர்த்துக் கொண்டது. அவ்வளவுதான்!

பள்ளிகளில் செய்த மாறுதலின் கதி இபபடி! ஆட்சி மொழியாகத் தாய்மொழியை மேற்கொள்வது என்ற திட்டம் திருச்சி மாவட்டத்தில் மட்டும் முதன் முதலாக அமுல் நடத்தப் பட்டது. இந்த ஏற்பாட்டுக்கும் தோழா அவினாசிலிங்கனாரே பொறுபபாளராவர். அண்மையில், அமைச்சர் பக்தவத்சலம், கோவையில் பேசும்போது, தமிழில் அரசாங்க அலுவல்களை நடத்துவது அவ்வளவு வெற்றியளிக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். அதிகாரிகள் தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்தப் போதுமான அளவு தேர்ச்சி பெறவில்லை என்றும் அவர் பேசியிருக்கிறார். எனவே மற்ற மாவட்டங்கட்கும் இம் முறையை நீடிக்க நாங்கள் அஞ்சுகிறோம் என்று தங்கள் இயலாமையை வெளிப்படுத்தியிருக்கிறார் அமைச்சர். பள்ளியில் முதல்மொழி தமிழ் எனற திட்டம் பாழாயிற்று; அஃதே போன்று அரசாங்க அலுவல்களைத் தமிழில் நடத்துவது என்ற திட்டமும் தோல்வியடைகிறது. அமைச்சரே வெளிப் படையாக ஒப்புக்கொள்ளும் செய்தி இது!


ஏன் இந்த நிலை? திருச்சி மாவட்ட அதிகாரிகள் தமிழ்ப் பயிற்சி சிறிதுமற்றவர்களா? அவர்கள் நினைத்தால் தமிழில் எழுதுவது அத்தனை கடினமா? 'தென்னிந்தியர்கள் எந்த மொழியையும் கற்றுக்கொள்ளும் நிபுணர்கள்' என்ற பாராட்டு தாய்மொழிப் பயிற்சிபெற மட்டும் பயன்படாது போய்விடுமா? உண்மை நிலை என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் சூது விளங்கும்.

அதிகாரிகள் தமிழுக்கு ஆக்கம் தருவதை விரும்பவில்லை! இதுதான் உண்மைக் காரணம். எனவே தமிழ் ஆட்சி பீடத்தில் அமர்வதைத் தடை செய்யவே இததகைய 'ஒத்துழையாமையை' மேற்கொண்டிருக்கின்றனர். ஆட்சியிலுள்ள அமைச்சர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ஐக்கிய மாகாணத்தில் இந்தி ஆட்சிமொழி யாக்கப்படுகிறது. மிக வேகமாக அதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, 'இந்தியைப் படித்துக்கொள்; இல்லையேல் வெளியே போ' என்று அங்கே கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. அங்கேயும் காங்கிரஸ் மந்திரிகள் தாம் ஆளுகிறார்கள்; அவர்கள் தம் தாய் மொழி இந்திக்

குத் தரும் ஆக்கம் இவ்விதம்! இங்கேயும் காங்கிரஸ் மந்திரிகள் தாம் ஆளுகிறார்கள்; ஆனால் 'ஆட்சிக்குத் தமிழ் இசையவில்லை' என்று கைவிரிக்கத்தான் இவர்களால் முடிகிறது. எவ்வளவு அன்பு, தாய்மொழியிடம் இவர்கட்கு?

ஆனால் இவர்களும் கட்டளை பிறப்பிக்கிறார்கள். அமைச்சர் சீதாராம ரெட்டியார், "இந்தி படித்துக் கொள்ளுங்கள்; இல்லையேல் உத்தியோகத்திற்குரிய தகுதியை இழந்துவிடுவீர்கள்" என்று உத்தியோகஸ்தர்களிடம் பேசுகிறார். மந்திரி மாதவமேனன் "சமஸ்கிருதம் படிக்காத மனிதனும் மனிதனா?" என்ற தோரணையில் வடமொழிக்கு ஆதரவு திரட்டுகிறார்; "இந்தியை 4-ம் வகுப்பிலேயே தொடங்கிவிட்டால் என்ன?" என்ற ஆலோசனையில் மூழ்கியிருக்கிறார். மத்திய சர்க்காருக்கு மட்டும் பயன்படுத்தப் போகிற இந்திக்கு ஆதிக்கம் தேடுகிறார்கள்; மாண்டுபோன வடமொழிக்கு உயிர்ப்பிச்சை அளிக்க முனைகிறார்கள் இவர்கள், ஆனால் 'தாய்மொழியில் பயிற்சி இல்லையா? உத்தியோகம் இல்லை' என்று ஒரு உத்தரவு போட மட்டும் இவர்கட்கு மனம் வருவதில்லை.

தமிழகத்தின் 'தலை விதி' அப்படியிருக்கிறது! இந்திக்கும் வடமொழிக்கும் ஆதரவும் ஆக்கமும் தேடும் மந்திரிகளின் ஆட்சியில தாய்மொழிகளின் நிலை வேறெப்படி இருக்க முடியும்? இந்நிலையில் தமிழை முதல் மொழி' என்று கூறிக்கொண்டிருப்பது வேடிக்கையும் வேதனையும் நிறைந்த விந்தைதான்!



காலமும் கருத்தும்

கிளைக் கழகங்கள்

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையில் தோற்றம் பெற்று நாற்பது நாட்களே ஆகின்றன. அதற்குள் தமிழகமெங்கணும் இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் அமைக்கப்பட்டுவிட்டன என்றால் பொதுமக்கள் முன்னேற்றக் கழகத்தின்பால் காட்டும் ஆதரவின் தன்மையை நாம் ஒருவாறுபுரிந்து கொள்ளமுடியும். 'எத்தனையோ பேர் போனார்கள்; அதைப் போலவே இவர்களும்; அவர்கள் என்ன செய்தார்கள்? இவர்கள் என்ன செய்துவிடுவார்கள்?' என்று எக்களிப்பு நையாண்டி செய்தனர் பழைய தலைவரும் அவர் ஆதரவாளர்களும். ஆட்சியிலுள்ளோர் "கழகம் அழிந்தது; தொல்லை ஒழிந்தது" என்று அமைதியில் நாட்டங்கொண்டிருந்தனர். மாற்றுக் கட்சியினர் "அப்பாடா! ஒயமாட்டான்களே! கல்யாணம்வந்தது, ஒழிந்தான்கள்" என்று பூரிப்படைந்தனர். இவர்கள் எண்ணத்திலெல்லாம் மண் விழும்படியாகப் புதுக் கழக அமைப்பு ஆர்வத்துடன் நடைபெறுகிறது. தொடக்கவிழாக் கூட்டங்கள் சென்ற வாரத்திலிருந்து நடைபெற்றவண்ண மிருக்கின்றன. கழகப் பிரசாரக் குழுவினருக்கு ஓயாத பணி; நாட்டுமக்கட்குத் தெவிட்டாத அறிவு விருந்து. இம் முழக்கம் திராவிடப் பெரு மக்களின் இதய ஒலி என்பதை அரசினர் கண்டுகொள்ள நாட்கள் பல பிடிக்காது; ஏற்கனவே அறிந்துகொண்டு விட்டனர் என்று நமபும் வகையில் அடக்கு முறையை அவிழ்த்து விட வாயப்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அறிஞர் அண்ணாத்துரைமீது வழக்குத் தொடரபபட்டிருக்கிறது. பத்திரிகைகள், கட்டுரை எழுதுவோர், அச்சிடுவோர் மீதெல்லாம் அடக்குமுறை ஈட்டிபாய்ந்த வண்ணமிருககிறது. எனவே முன்னேற்றக் கழகம் தொடங்கப்பெற்ற சில திங்கட்குள்ளேயே போர் முழக்கம் செய்ய நேரிடுமென்றெண்ணுகிறோம். எழுத்துரிமை, பேச்சுரிமை பேணும் போர்களம் விரைவில் அமைக்கப் படுமென்றும் நம்புகிறோம்: அதற்குள், முன்னேற்றக் கழகக் கிளைகளை இதுவரை ஏற்பட்டிராத இடங்களில் ஏற்படுத்துவதோடு, ஏற்பட்ட இடங்களில் உறுப்பினர் சேர்ப்பதில் பெரு முயற்சி காட்டுமாறு தோழர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். பணியொன்றே நோக்கமாய்க் கொண்டு, தூய உளத்தினர் மேற்கொள்ளும் முயற்சி எதுதான் வெற்றி பெறாது!


திருமண மசோதா!

டில்லி சட்டசபையில் தனித் திருமண மசோதா ஒன்று நிறைவேற இருக்கிறது. பொது மக்கள் கருத்தறிவதற்காக அம் மசோதா வெளியிடப்பட்டிருக்கிறது. அம் மசோதாவின்படி மதசமபிரதாயமின்

றியே பதிவுமுறை மூலம் திருமணம் செய்துகொள்ளலாம்; அத்திருமணம் சட்டப்படி செல்லுபடியானதாகும். இவ்வசதி வேண்டுமென்றே முற்போக்காளர்கள் நெடு நாளாகக் கோரிவந்திருக்கின்றனர். அக் கோரிக்கை இப்போதுதான் வெற்றிபெறும் தருவாயிலிருக்கிறது. ஆனால் சங்கராச்சாரியார் இம்மசோதா பற்றித் தம் கருத்தைக் கூறியிருப்பதைப் பார்க்கும்போது 'இம் மனிதர் இந்நூற்றாண்டில் வாழவேண்டியவரல்லவே' என்ற எண்ணம்தான் பிறக்கிறது. மதக்கட்டுப்பாடின்றி நடைபெறும் திருமணம், ஒழுக்கக் கேட்டில்தான் முடியுமாம்! ஹிந்து சமுதாயம் அழிந்துவிடுமாம்! இப்படி ஒப்பாரி வைக்கிறார் அவர். ஆனால் நாட்டு மக்களின் நலனில் அக்கறையுடையோர் ஒருமுகமாக இம் மசோதாவை வரவேற்கத்தான் செய்வார்கள்; மசோதா உடனடியாக நிறைவேற்றப்படுவது அவசியமென்று வற்புறுத்தத்தான் செய்வார்கள்.

பாரதிதாசன் பரம்பரை

இதுவரை, கவியரசர் பாரதிதாசனார் வகுத்துத் தந்த வழியில் நின்று கவிதைகள் எழுதிவரும் 48-இளங்கவிஞர்களைப் 'பொன்னி' தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது. வளரும் பாரதிதாசன் பரம்பரைக்கு வாழ்த்துக்கூறி இந்த இதழுடன் இப்பகுதியை நிறுத்திக் கொள்கிறோம்.



செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்



‘‘கங்கா ஸ்நானம் ஆச்சோ?’’ என்ற கேள்வி என்னைத் திடுக்கிட வைத்தது. ‘யாரோ ஊருக்குப் புதியவர் நம்மிடம் வந்திருக்கிறார்’ என்று திரும்பிப் பார்த்தேன். ‘சுய மரியாதைச் சுடர்’ இளங்கோவன் என் முன்னால் நின்று கொண்டிருந்தான். இளங்கோவனை நாங்களெல்லாம் ‘சுயமரியாதைச் சுடர்’ என்ற அடைமொழியோடுதான் அழைப்பது வழக்கம். அவனுடைய குடும்பமே சுயமரியாதை மணம் கமழ்வதென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

அவன் இப்படியொரு கேள்வியை என்னிடம் கேட்பானென்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ‘‘என்னப்பா, விளையாடுகிறாயா? உனக்கும் எனக்கும் கங்கா ஸ்நான பிராப்தம்தான் எழெட்டு ஆண்டுகளாகக் கிட்டவில்லையே’’ என்றேன்.

‘‘ஏது, விஷயம் புரியாமல் பேசுகிறீர்?’’

‘‘சரி, புரியவில்லைதான். விளங்கச் சொல்லேன்’’

‘‘காலையிலிருந்து நானும் கவனித்துக்கொண்டிருக்கேன். ‘கங்கா ஸ்நானம் ஆச்சோ?’ என்று ஒருவர் கேட்க, மற்றொருவர் ‘ஆச்சு’ என்று பதிலளிக்கவும் இந்தத் திருக்கூத்து நடந்துகொண்டேயிருக்கிறது. ‘ஆச்சு’ ‘ஆச்சு’ என்று கூறியவர்கள் குறைந்தது, நான் கவனித்த மட்டில் ஐம்பதுக்குக் குறையாது. எனக்குச் சந்தேகம் பற்றிக்கொண்டது. இத்தனை பேர் ஒருமுகமாகச் செல்லும் போது உண்மையாய்த்தானிருக்க வேண்டுமென்று நம்பினேன். ஆனால் காசிக்கு அவர்கள் போயிருக்க முடியாது. எனவே கங்கைதான் இங்கே வந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அந்த முடிவை உறுதிப்படுத்தவே உம்மிடம் அந்தக் கேள்வியை வீசினேன்.’’

‘‘போடா, பித்துக்கொள்ளி! கிணற்றுத் தண்ணீரில் குளித்துவிட்டுக் ‘கங்கா ஸ்நானம் ஆச்சு’ என்று அந்தப் பைத்தியங்கள் உளறினால் நீயும் திரும்ப ஒப்பிக்கலாமா?’’

‘‘பைத்தியமா? ஊரிலுள்ள எல்லோருக்கும் தீபாவளியன்று அதிகாலையில் இந்தப் பைத்தியம பிடித்துவிட்டிருக்கிறதே என்றுதான் நான் ஆச்சரியப்படுகிறேன்’’

‘‘பைத்தியம் மட்டுமல்ல, எல்லோரும் ஒரே மாதிரியாகப் புளுகிறார்களல்லவா, அதுதான வேடிக்கை’’ என்று உரையாடலை நான் முடிக்கவே, நண்பன் ‘சுயமரியாதைச் சுடர்’ மற்றொரு நபரைத் தேடி வெளியே புறப்பட்டான்.

'பொன்னி' வாசகர்கட்குப் புதுச் செய்தி!

அடுத்த இதழ் முதல் (10–11–49) 'பொன்னி' 72 பக்கங்களுடன் வருகிறது. அதாவது இப்பொழுதிருப்பதை விட இன்னும் 16 பக்கங்கள் அதிகமாகச் சேர்க்கப்படுகின்றன.

ஆகவே புதுப் பகுதிகள் பலவற்றுடன் அடுத்த 'பொன்னி' இதழ் திகழும்.

சிறுவர் அரங்கம், சுவை மிக்க கவிதைகள், பேட்டிக் கட்டுரைகள், விவாதக் கட்டுரைகள் மற்றும் பல புதிய பகுதிகள் சேர்க்கப்படுகின்றன.

விலை 5 அணாத்தான்!

உங்களுக்குப் பிரதி தொடர்ந்து கிடைக்க உங்களூர்
விற்பனையாளரிடம் தெரிவித்து விடுங்கள்.

அல்லது

அலுவலகத்திற்கு நேராகச் சந்தாக்கட்டி
வரவழைத்துக் கொள்ளுங்கள்.

ஆண்டுச் சந்தா	ரூ. 7/	ஆறு மாதம்	3—12—0
வெளியூர்	ரூ 9/	,,	4— 8—0



இருபத்தேழாம் அத்தியாயம்
என் குருநாதர்!

இந்தக் காலத்தில் 'பெரிய மனிதர்கள்' என்று சொன்னால், அது அவர்களுடைய தகுதியையோ, திறமையையோ, அறிவையோ குறிக்காதென்றும், பணத்தைத்தான் குறிக்குமென்றும் ஏற்கெனவே ஒரு முறை தெரிவித்திருக்கிறேன். அவர்களுடைய காரியங்கள் அனைத்துமே எப்பொழுதும் அலாதியானவையாகத்தான் இருக்கும். டாக்டர் கரியன் என்று ஒருவர் இருப்பார். அவர் மேல் நாட்டுக்குச் சென்று கண்ணைக் கெடுக்கும் பரீட்சையிலோ, காதைக் கெடுக்கும் பரீட்சையிலோ தேறி வந்தவராயிருப்பார். பல பெரிய மனிதர்கள் பணத்தைச் செலவழிக்க வேறு வழியின்றி அவருடன் தொடர்பு வைத்துக்கொள்வார்கள். அதன் காரணமாக டாக்டர் கரியனும் பெரிய மனிதராகியிருப்பார். வெள்ளைக்காரனையே தம் வழிபடும் தெய்வமாகக் கொண்டு, அவர் காங்கிரசையும் காந்திமகானையும் வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருப்பார். அவருடைய நெஞ்சில் உரமும் இருக்காது; நேர்மையில் திறனும் இருக்காது. லட்சியமோ பணம், பணம், பணம்!—அதற்கு எந்தக் கோணத்தில் நின்று எத்தனை விதமான பல்டிகள் அடிக்க வேண்டுமானாலும் அவர் தயாராயிருப்பார். அப்படிப்பட்டவர் தம் சுயநலத்தைக் கருதித் திடீரென்று காங்கிரஸில் சேருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் — அவருடைய பெயர் பிரமாதமாக அடிபடும். பெரிய மனிதர்களிடையே மட்டுமல்ல; பத்திரிகைகளிலும்தான். அவருடைய பூர்வோத்திரம், குணாதிசயம் எல்லாம் அடியோடு

மறைந்தே போய்விடும். பின்னுல் பணத்துக்கு வழியில்லையென்றோ, பதவிக்கு வழியில்லையென்ருே புகழுக்கு வழியில்லையென்றோ அவர் காங்கிரஸிலிருந்து விலகினர் என்று வைத்துக் கொள்ளுங்கள் — அப்பொழுதும் அவருடைய பெயர் அடிபடாமல் இருக்காது. பெரிய மனிதர்களுடைய காரியமே எப்பொழுதும் காதும் காதும் வைத்தாற்போல் நடப்பதில்லையல்லவா!

என்னைப் போன்றவர்களுடைய காரியங்களின் பலாபலன்களோ அதற்கு நேர் விரோதமானவை. நான் காங்கிரஸில் சேர்ந்தபோதும் என்னுடைய பெயர் அடிபடவில்லை; அதை விட்டு விலகியபோதும் என்னுடைய பெயர் அடிபடவில்லை. அவ்வாறு அடிபடும் என்று நானும் எதிர்பார்க்கவில்லை.

ஆனுல், இந்த நண்பர்கள் இருக்கிருர்களே, அவர்கள் மிகவும் பொல்லாதவர்கள் — மேற்கூறிய தாரதம்மியத்தை வைத்துக்கொண்டு என்னைப் போன்றவர்களைக் 'கோட்டா' செய்வதில் அவர்களுக்கு ஒரு தனி ஆனந்தம். அப்படிப்பட்டவர்களுடைய காதில் நான் காங்கிரசுக்கு முழுக்குப் போட்டுவிட்டேன் என்ற செய்தி விழுந்தால் கேட்க வேண்டுமா? — என்னைக் கண்டதும், "வரவேணும், வரவேணும், நீங்கள் காங்கிரஸிலிருந்து விலகி விட்டீர்களாமே? இன்று காலைப் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது — உண்மைதானு?" என்பார் ஒருவர்.

"இவரைப் போன்றவர்கள் காங்கிரஸை விட்டு விலகினுல் தலைவர்கள் சும்மா இருப்பார்களா? 'தங்களுடைய ராஜிநாமாவை உடனே ரத்துச் செய்யுங்கள்' என்று தந்தி மேல் தந்தி அடிக்க மாட்டார்களா?" என்பார் இன்னெருவர்.

"இனிமேல் தம்முடைய ராஜிநாமாவுக்குக் காரணம் இன்னதென்பதை விளக்கி இவர் அறிக்கைமேல் அறிக்கை விட்டுக்கொண்டே இருப்பார். பத்திரிகைகளில் அது பத்தி, பத்தியாக வெளியாகும்" என்பார் மற்றவர்.

"இவர் என்னமோ அறிக்கை விடுவதற்குத் தயார்தான்; பத்திரிகைகள்தான பிரசுரிக்கத் தயாரா யிருக்காது!" என்று சொல்லிவிட்டுக் 'குபீ' ரென்று சிரிப்பார் மற்றும் ஒருவர்.

அநேகமாக, இவர்கள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களா யிருப்பார்கள். இவர்களுக்குப் பத்திரிகையே உலகமாகவும், உலகமே பத்திரிகையாகவும் தோன்றும். தனி மனிதனுடைய யோக்கியதை, ஒழுக்கம் — இவற்றைப் பற்றி இவர்களுக்கு அக்கறையே கிடையாது. பத்திரிகையில் என்ன வருகிறதோ, அது தான் வேதவாக்கு. வேதவாக்கில் எப்படி உண்மை கிடையாதோ, அப்படியே இன்றையப் பத்திரிகை உலகிலும் உண்மை கிடையாது என்பதை இவர்களைப் போன்றவர்கள் உணருவதேயில்லை. அப்படி உணர்ந்தால்தான உலகம் உருப்பட்டு விடுமே!

என்னைப் போன்றவர்கள் தங்களுடைய உண்மையில்லை

என்னதான் விளக்கிச் சொன்னாலும் இவர்களுக்குப் புரியவே புரியாது. இவர்கள் கண்டதே காட்சி; கொண்டதே கோலம்! உலகத்தில் உண்மைக்கு இடமில்லாமல் போவதற்குக் காரணமே இவர்கள்தான். கீழ்த்தர வகுப்பார் படிக்காமல் கெட்டவர்கள் என்றால் இவர்கள் படித்துக் கெட்டவர்கள்—அவ்வளவுதான் வித்தியாசம்!

இத்தகைய நண்பர்கள் நிறைந்த உலகத்தைத் தன்னலமற்ற சேவையினாலோ, அறிவினாலோ, திறமையினாலோ யாரும் வெற்றிகொள்ள முடியாது. பணத்தினாலும், பொய்யினாலும், பித்தலாட்டத்தினாலும்தான் வெற்றிகொள்ள முடியும். இந்த உண்மையை அறிந்தவர்களுக்கு வாழ்வு; அறியாதவர்களுக்குச் சாவு!

நான் சாக விரும்பமில்லை; வாழத்தான் விரும்பினேன். என்னை நாணயத்தோடு வாழ உலகம் அனுமதிக்கவில்லை; ஆகவே, நான் நாணயத்தைக் கைவிட்டேன்.

எந்த ஸ்தாபனத்தையும் ஆரம்பத்தில் வளர்ப்பவர்கள் என்னைப் போன்ற சாதாரண மக்கள்தான்; பின்னால் அந்த ஸ்தாபனத்தைப் பணக்காரர்கள் விலை கொடுத்து வாங்குவதுபோல் வாங்கி விடுகிறார்கள். அதற்குப் பிறகு அந்த ஸ்தாபனத்தில் என்னைப் போன்றவர்களுக்கு எங்கே இடமிருக்கிறது?

இந்த உண்மையை அறிந்து என்னிடம் அனுதாபம் கொண்ட ஜீவன் ஒன்றே தான்; அந்த ஜீவன் சாந்தினியைத் தவிர வேறு யாராயிருக்க முடியும்?

சாந்தினி என்னிடம் அனுதாபம் கொண்டாலும் காங்கிரசுக்கு விரோதமாக நான் செல்வதை அவர் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அவள் என்னை அதனிடம் அனுதாபங் கொள்ளச் செய்தாள்; தானும் அனுதாபங் கொண்டாள். ஆனால் அந்த அனுதாபத்தின் காரணமாக, நான் என்னுடைய வாழ்க்கை நலத்தைக் குலைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஏற்கெனவே குலைத்துக் கொண்டதெல்லாம் போதாதா?

உலகத்தில் எல்லாவற்றுக்கும் ஜீவாதாரமானது பணம். அந்தச் சர்வ வல்லமையுள்ள பணத்தைத் தேடுவதில் நான் என்னுடைய முழுக் கவனத்

தையும் செலுத்தினேன். அதற்கேற்றாற்போல் அந்தக் காலத்தில் பணம் பண்ணுவது அவ்வளவு கடினமான காரியமாகவும் இல்லை. யுத்த காலத்தை முன்னிட்டுச் சர்க்கார் எடுத்ததற்கெல்லாம் 'காண்ட்ராக்ட்' என்றார்கள். குப்பை, கூளம் 'காண்ட்ராக்ட்' எடுத்தவனெல்லாம் குபேரனாகிக் கொண்டிருந்தான்!

இத்தகைய 'காண்ட்ராக்ட்'டுகளின் விஷயத்தில் பாரிஸ்டர் பரந்தாமனின் கவனமும் சென்றது. ஆனால், காங்கிரஸ்காரர்கள் தான் யுத்தத்துக்கு எந்தவிதமான உதவியும் செய்யக்கூடாதே! இருந்தாலும் சந்தர்ப்பத்தைக் கைவிடுவதற்குப் பாரிஸ்டர் பரந்தாமன் விரும்பவில்லை. அதற்காகக் காங்கிரசைவிட்டுத் தலை முழுகவும் அவர் தயாராயில்லை. இந்த இரண்டுக்கும் மத்தியில் அவர் என்ன செய்வது என்று யோசித்தார். கடைசியில் என்னுடைய உதவியை நாடினார். காங்கிரசுக்கு முழுக்குப் போட்டிருந்ததோடு சத்தியத்துக்கும் முழுக்குப்போட்டிருந்த நான், உடனே அவருடைய கோரிக்கைக்கு இணங்கினேன். எப்படியாவது பணம் பண்ண வேண்டுமென்பது தானே அப்பொழுது என் லக்ஷியமாக உருவெடுத்திருந்தது!

எந்த 'காண்ட்ராக்ட்' எடுத்தாலும் அதை என்னுடைய பெயரால் எடுப்பதென்றும், கிடைக்கும் லாபத்தை இருவரும் பங்கு போட்டுக் கொள்வதென்றும் கடைசியில் முடிவாயிற்று.

"முதலில் நீங்கள் என்னைக் கொண்டு யுத்த 'காண்ட்ராக்ட்' எடுப்பதே பிசகு; இரண்டாவது, கிடைக்கும் லாபத்தில் பங்கு பெறுவது அதைவிடப் பிசகு!" என்றேன் நான் சிரித்துக்கொண்டே.

"என்னுடைய வாழ்க்கைத் தரத்தை மேலும்மேலும் உயர்த்திக்கொள்வதற்கு எத்தனை தவறுகள்வேண்டுமானாலும் செய்ய நான் தயாராயிருக்கிறேன். உலகத்தில் எது சரியான காரியம் எது தவறான காரியம் என்று தீர்மானிப்பதே கடினம். உமக்குத் தவறாகத் தோன்றுவது எனக்குச் சரியானதாகவும் எனக்குத் தவறாகத் தோன்றுவது உமக்குச் சரியானதாகவும் தோன்றலாமல்லவா?"

"உங்களுக்குச் சரியாகத் தோன்றும் காரியத்தை நீங்கள் ஏன் பகிரங்கமாகச் செய்யக்கூடாது?"

"இந்த இடத்தில்தான் உம்மைப் போன்றவர்களுக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. உம்மை அறியாமல் நீர் இங்கே என்னைத் தவறு செய்யச் சொல்கிறீர்!"

"தவறு செய்யச் சொல்கிறேனா!"

"ஆமாம்; உம்மைப்போன்றவர்கள் எதிலும் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்றுவிரும்புகிறார்கள். இரண்டும் கெட்டானாக வாழ்வதற்கு அவர்கள் விரும்புவதேயில்லை. அதனாலேயே அவர்கள் வெகு சீக்கிரத்தில் சாவை நெருங்கிவிடுகிறார்கள். வாழ விரும்புபவன் எந்தக் காரியத்திலும் பட்டும் படாமலும் இருக்க வேண்டும். மனச் சாட்சிக்கு அவன் இடங்கொடுக்கவே கூடாது. என்னைக் கேட்டால் நீர் காங்

திராவிட முன்னேற்றக் கழகம்

தொடக்கவிழாக் கூட்டங்கள்

●

புதுக்கோட்டை நகரக்கிளையின் துவக்கவிழாக் கூட்டம் 16-10-49 ஞாயிறு காலை 10-மணிக்கு ராஜா டாக்கிஸில் தோழர் ஏ. தியாகராஜன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அவ்வமயம் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன் ஆகியோர் முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்களை விளக்கி அரிய சொற்பொழிவாற்றினர். தோழர் அரு. பெரியண்ணன் (செயலாளர்) நன்றிகூறக் கூட்டம் 12-மணிக்கு இனிது முடிந்தது என விளம்பர உறுப்பினர்கள் எஸ். முத்துவேல், அய்யாமணி அறிவிக்கின்றனர்.

* * *

குன்னூர் நகர்க் கிளையின் தொடக்கவிழாக் கூட்டம் 21-10-49 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இவ்வூர் ஜவஹர்பேட்டையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 'பொன்னி' ஆசிரியர் தோழர் முருகு சுப்பிரமணியன் கிளையைத் தொடங்கிவைத்துச் சொற்பொழிவாற்றினர், தோழர்கள் கோவிந்தன், அழகிரி ஆகியோர் கழகக் கொள்கைகளைப்பற்றிப்பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் முருகேசன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

ரசுக்கு முழுக்குப் போட்டு விட்டீரே, அதைக்கூடத் தவறான காரியம், அவசியமில்லாத காரியம் என்பேன். அதே தவறைப் பகிரங்கமாக யுத்த 'காண்ட்ராக்ட்' எடுப்பதன் மூலம் நானும் செய்யவேண்டுமா?— வேண்டாம்; மேலும் மேலும் நீர் தவறு செய்வதோடு என்னையும் தவறு செய்யச் சொல்லாதீர். இனியாவது நான் சொல்கிறபடி கேளும். என்னுடைய செல்வாக்கையும் பக்க பலத்தையும் துணையாகக் கொண்டு நீர் எத்தனையோ காரியங்களை இந்த உலகத்தில் சுலபமாகச் சாதிக்கலாம். அதற்கு இப்போது சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. என்ன சொல்கிறீர்?"

"செய்வதற்கு என்ன இருக்கிறது? குருநாதரின் உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்!" என்றேன் நான் சிரித்துக் கொண்டே.

"பேஷ்! அப்படிச் சொல்லுங்கள்!" என்று பரந்தாமன் என்னைத் தட்டிக் கொடுத்தார்.

அப்புறம் கேட்கவேண்டுமா? சர்க்கார் புத்தப் புது நோட்டுகளை எங்களுக்கென்றே அச்சிட்டுத் தள்ளிக்கொண்டிருந்தனர். நாங்கள் மனங்கொண்ட மட்டும் வாரிக் குவித்தோம். மறு வருடமே சாந்தினிக்கும் எனக்கும் கல்யாணமாயிற்று. பரிமளாவின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. பாரிஸ்டர் பரந்தாமனை அவள் வாயார மனமார வாழ்த்தினுள். அவரால்தான் நான் வாழக் கற்றுக்கொண்டதாக அவள் நம்பினுள். உண்மையும் அதுதானே? (தொடரும்)



சஞ்சீவிச் சாலை

- இளமைப்பித்தன் -

இரவு ஒன்பது மணி இருக்கும். சாப்பாட்டை முடித்துக் கொண்டு வாசல் திண்ணையின் மேல் சாய்ந்து கொண்டிருந்தேன். அரையுங் குறையுமாக எழுதப்பட்டிருந்த கதை 'முடிவை' எதிர்பார்த்த வண்ணம் உள்ளே இருக்கும் மேஜையின் மேல் கிடந்தது! மிகவும் நெருக்கடியான கட்டத்தில் வந்து சிக்கியிருந்ததால் அப்படியே விடப்பட்டிருந்தது அந்தக் கதை! நாளைத் தபாலில் அது போய்ச்சேரவேண்டும். அவசரமான வார்ப்பு; கொஞ்சம் இளகல் தன்மை ஏற்பட்டு விட்டது!

அதை இறுகவைப்பதற்குள் இடும்பைகூர் என் வயிற்றில் 'பசி' வெறியாட்டம் போடத் தலைப்பட்டது. பசி வந்திடப் பத்தும் பறந்து போவது இயல்புதானே!

சாப்பாட்டை முடித்துக் கொண்டதும், பிறகு களைப்பு! உண்ட களைப்பு லேசாக மயக்கத்தை வருவித்துக்கொடுத்தது. படுத்தால் 'கட்டை' விரைத்துப்போகக் கூடிய அளவுக்கு வந்துவிடுமென்று நன்றாகத் தெரிந்துபோய் விட்டது. அதற்காகத் தூக்கத்திற்குப் 'போக்கு'க் காட்டிக்கொண்டிருந்தேன். முடியாத கதைக்கு ஓர் முடிவைத் தேடித் திரிந்த வண்ணமிருந்தது என் மனம்.

பார்வை வானத்தில் தொலை தூரத்திற்கு அப்பால் சுழலும் ஒரு பிரகாசமான ஒளிக்கோளத்தையும், பிறை நிலவையும் சுற்றிச் சுற்றி வட்டம்போட்டுக் கொண்டிருந்தது.

வீதியில் நடமாட்டம் அற்றுப்போய் அமைதி குடி கொண்டு விளங்கியது! தூக்கம் மாத்திரம் தூங்கிவிடாமல் மெள்ள என் கண்ணிமைகளுக்குள் இழை போட்டபடியே இருந்தது. 'படக் படக்' கென்ற பாதக் குறடுகளின் ஓசை தூரத்திலிருந்து நெருங்கிவந்து வீட்டுவாசலில் மௌனம் சாதித்தது!

"யாரது?" என்றேன், வந்து நின்றவரை நோக்கி. இருட்டில் சரியானபடி அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

"மோகனசுந்தரம் தானே பேசுவது?" என்ற கேள்வி என் பக்கமே திரும்பி வந்து மோதிற்று!

"ஆமாம், நான்தான்! நீங்கள் யார்?"

கீழே நின்றவர், படியேறி வந்து என் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு "தெரியவில்லையா என்னை?" என்று கேட்டார். வாசல் திண்ணையில் விளக்கில்லாத குறையைப் போக்கிவிட்டது அவருடைய குரல்!

"அடடா! திரிசங்குவா. வர வேண்டும். ஏது இந்த வேளை யில் எதிர்பாராத வகையில் வந்து சேர்ந்தீர்கள்! உள்ளே வாருங்கள்" என்று அவரை அழைத்துக் கொண்டு போனேன். விளக்கு வெளிச்சத்தில் பார்த்த பிறகும் கூட அவரை அடையாளம் கண்டு பிடிப்பதற்குக் கொஞ்சம் கடின மாகத்தான் இருந்தது. கழுத்துப் பிடரிவரையில் சுருண்டு புரளும் கேசமும், மார்பைத் தொட முயலும் தாடியும், உடலை மறைக்கக் காவியுடை யும்— விசித்திரமாகத்தான் இருந்தன எல்லாம்!

நண்பர் திரிசங்கு ஒரு கவிஞர். வெகு நாட்களுக்கு முன்பே பத்திரிகை மூலமாக எங்கள் இருவருக்கும் நட்புத் தொடர்பு உண்டு. ஆனால் சில மாதங்கள் வரையில் அவருடைய நடமாட்டமே கண்ணில் தென்படாமலிருந்து வந்தது! எங்கிருக்கிறார்,என்ன செய்துகொண்டிருக்கிறார் என்ற விபரங்கள் எதையுமே என்னால் அறிய முடியவில்லை.

பேச்சை, அவரே துவக்கினார். "மோகன சுந்தரம்! முன்பு நாம் சந்தித்தபோது, நான் இருந்த நிலை வேறு. இப்போது இருக்கும் நிலைமை வேறு. 'என்னடா, பிச்சைக்காரன் மாதிரி காவியும் கமண்டலமுமாக மாறிவிட்டானே திரிசங்கு' என்று நினைக்கிறாய் அல்லவா? எல்லாம் நன்மைக்காகத்தான். உம்......அது இருக்கட்டும், இப்போது கதைகள் எழுதுவதை நீ விட்டுவிட வில்லையே? வருமானம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"வருமானமா? இன்றைக்குப் பாங்கியிலிருந்த 'மினிமம் பாலன்ஸ்' ரூபாய் 5–7–4 ம் வீட்டுச் செலவிற்கு எடுத்து இருக்கிறேன். மேலும் குறையாகக் கிடக்கும் கதையை முடித்தனுப்பினால் ஏதாவது வந்து சேரும். பிறகு இருக்கவே இருக்கிறது' என்றேன். புன்முறுவலுடன்.

"சச்சிதானந்தம்......... சச்சிதானந்தம்......என்ன வாழ்க்கையப்பா இது! எப்போது பார்த்தாலும் 'இல்லை' என்ற குறைதான்?"

"அதுதான் நமது பிறப்புரிமை யாயிற்றே. கிடக்கட்டும் இதெல்லாம என்ன வேஷம்?"

"வேஷமா? மோகனசுந்தரம், இது வேஷமல்ல. நான் ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்டு ஏறக்குறைய ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகவே ஆகின்றன. இதில் உள்ள சுகம், சம்சார வாழ்வில் நிச்சயமாய்க் கிடையாது என்று நிச்சயமாகச் சொல்லுவேன... சச்சிதானந்தம்" என்று சொல்லிவிட்டுக் கலகல வென்று சிரித்தார்.

இரவு வெகுநேரம் வரையிலும் இலக்கியம், வேதாந்தம் முதலியவைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்துவிட்டுக் கண்ணயர்ந்தோம்,

மறுநாள்! திரிசங்கு ஊருக்குக் கிளம்பினார். அவர் இருக்கும் ஆசிரமத்தைப் பற்றியும் அதன் நோக்கங்களைப் பற்றியும் அவருக்கே உரிய அழகு மொழிகளால். கேட்பவர்களை வசீகரிக்கும் 'பாணி'யில்பேசியதைக் கேட்டதும் எனக்கும கொஞ்சம் 'சபலம்' தட்டிற்று!



"நானும் உங்களுடன் வர லாமா?" என்று கேட்கக்கூடிய கட்டத்தில் என்னைக் கொண்டு வந்து நிறுத்தி வைத்துக் கொண்டு, "வருகிறாயா என்னுடன்?" என்று கேட்டார் அவர். செலவு முழுவதும் அவ ரைச் சேர்ந்ததாக இருக்கும பொழுது போவதற்கு என்ன தடை! புறப்பட்டு விட்டேன்!

●

ரயிலை விட்டிறங்கிச் சுமார் ஒரு மைல் தூரம் நடந்து சென் றோம். ஒரு கிராமத்தை ஒட்டி யிருந்தது அந்த இடம். அழ கான மாந்தோப்பு! அதன் நடுவே ஒரு வெள்ளைக்கட்டிடம். அதைச் சுற்றிலும் காய்ந்த சரு கும், புல்லும் வேய்ந்த குடிசை கள். சிரிப்பொலிக்கும் சுழல் களை முழக்கிக்கொண்டே ஓடும் சிற்றாறு!

"இந்த இடம்தான் நாங்கள் வசிப்பது! வெள்ளைக் கட்டிடத் தில் தான் எங்கள் குருநாதர் பிரம்மானந்த சுவாமி இருக்கி றார். பெரிய ஞானக்கடல் அலை ஓயாத ஆழி! வா, போய் அவரைத் தரிசனம் செய்து விட்டு வரலாம்" என்று அங்கே அழைத்துச் சென்றார் என்னை!

முன் கூடத்தில் நான் கைந்து பேர்கள் – கிட்டத்தட் டத் திரிசங்குவைப் போலவே — காவிதரித்திருந் தார்கள். திடகாத்திரமான 'தேகி'களாகக் காணப்பட்டார் கள்.

"சச்சிதானந்தம்" என்றார் திரிசங்கு! அவர்களும் பதி லுக்கு அதேவார்த்தையைஎதி ரொலித்தார்கள். அதுதான் அங்கே மூலமந்திரமாக விளங் கியது; ஒவ்வொருவருடைய

உதட்டிலிருந்தும் வெடித்து வெளியே வந்து விழுந்தது!

அந்த வெள்ளைக் கட்டிடத்திற்குள் நுழைந்ததுமே எனக்கு என்னவோ ஒரு மாதிரியான மயக்கம் பிடித்துக் கொண்டது. மயக்கமென்றா சொன்னேன்? இல்லை. விழிப்புற்றுக்கிடந்த புலனுணர்ச்சிகள் யாவும் உறக்கத்திலாழ்ந்து விட்டன! அகிற்புகை 'கமகம' வென்று மணம் வீசிக்கொண்டிருந்தது.

முன் கட்டைத் தாண்டி உள்ளே போனோம். திரிசங்கு 'சாடை'களாலேயே என்னிடம், பேசத் தொடங்கி விட்டார். கடைசியில், பிரம்மானந்த சுவாமி இருக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம்.

சுவாமிகள் ஏதோ நூலாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவரைச் சுற்றிப் பழங்கால நூல்களிலிருந்து, அன்று வந்த தினசரிப் பத்திரிகை வரையில் சிதறுண்டு கிடந்தன.

"சிவோகம் —சிவோகம் —சச்சிதானந்தம்" என்று இரு கைகளையும் கூப்பி வணங்கினார் திரிசங்கு.

சுவாமிகள் புன்முறுவலுடன் எங்களை வரவேற்றார். அவருடைய காந்த அலைகள் புரளும் கண்களைக் கண்டதுமே, என்னுடைய கண்கள் கூசின!

நல்ல வலுவான உடற்கட்டு. செந்தாமரை போன்று செக்கச் சிவந்திருந்தமுகத்தில் கறு கறு வென்று வளர்ந்திருந்தது தாடி. வயதை எடை போட முடியாத தோற்றம்.

"இந்த உடம்பு, புதிதாக இருக்கிறதே, யார்?" என்று கேட்டார் அவர்.

"தம்பி! என் நண்பர். நல்ல எழுத்தாளர். சன்னிதானத்தைத் தரிசிக்க வேணுமென்று விரும்பினார். அழைத்துக் கொண்டு வந்தேன்" என்றார் திரிசங்கு!

"அவருக்குக் கொடுத்த 'தலைப்பின்' கீழ் நீர் போகலாம். உம்முடைய 'தலைப்பின' கீழ் அவர் வருவாரோ?" என்று கேட்டார் திரிசங்குவைப் பார்த்து!

அந்தக் கேள்வியின் பொருளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"தம்பி ரசிகனே தவிர, புனைய மாட்டான்" என்று பயபக்தியுடன் சொன்னார் நண்பர்.

"சிலர் 'இரட்டை வாழ்வு' வாழ்ந்து வருகிறார்களே என்று கேட்டேன்-தம்பியின் பெயர்?"

'மோகன சுந்தரம்"

"அப்படியா?"

"ஆசிரமத்தில் இன்று இரவைக்கழிக்க உத்திரவாக வேணும்".

"நல்லது. அப்படியே தங்கிப் போகலாம். சுற்றிப்பார்க்க விரும்பினால்'சஞ்சீவிச்சாலை'க்கு மட்டும் அழைத்துச் செல்ல வேண்டாம். பக்குவப்படாத உடம்பு"

"சித்தம்!"

"சச்சிதானந்தம்; சிவோகம் சிவோகம"

திரும்பச் சுவாமிகள் பேசவில்லை. மௌனத்தில் மூழ்கி விட்டார். அவரை வணங்கி விட்டு அங்கிருந்து வெளியேறினோம். திரிசங்குவின் ஆசிரமக் குடிசையில் நெடுநேரம் வரையில் ஆழ்ந்த சிந்தனையிலிடுபட்

டிருந்தேன். திரிசங்கு வெளி வேலைகளைக் கவனிப்பதற்காகச் சென்றிருந்தார். சுவாமிகள் சொன்ன 'இரட்டை வாழ்வு'க்கு என்ன பொருள்? அதைப் பற்றிய சிந்தனைதான் என்னை மடக்கிக் கொண்டிருந்தது.

'உடலும்–உயிருமா? ஞானமும்–அஞ்ஞானமுமா? பொய்யும்–மெய்யுமா? இன்பமும்–துன்பமுமா? உயர்வும்–தாழ்வுமா? நித்தியமும் – அநித்தியமுமா?' என்று விளங்கவே இல்லை. எப்படி விளங்கப்போகிறது? அந்த வார்த்தைக்குள் எத்தகைய தத்துவம் மறைந்து கிடக்கிறதோ? அதன் சூட்சுமத்தைக் கேவலம் வாழ்க்கைச் சேற்றில் கிடந்து உழன்று கொண்டிருக்கும் எனக்குப் புரிந்து கொள்ளத் திராணி உண்டா? பொய்யும், புனைசுருட்டும் நிரம்பிய கற்பனைக் கதைகளை எழுதிப் பொருளிலும், விஷய சுகத்திலும், ஈடுகொடுத்துக் கொண்டிருக்கும் என் மனம் வெகு வேகமாக 'ஓட்டப் பந்தயம்' விட்டுக் கொண்டிருந்தது.

"மோகனசுந்தரம்! ஏது ஒரேயடியாக மௌனத்தில் மூழ்கிப் போய் விட்டாய்?" என்று என் தோளைப்பிடித்துக் குலுக்கினார் திரிசங்கு. அவர் வந்ததைக் கூட நான் அறியவில்லை.

"இரட்டை வாழ்வு என்பதற்குப் பொருள் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றேன்.

திரிசங்கு 'இடி இடி' யென்று சிரித்துவிட்டுப் "பைத்தியமே! இரட்டை வாழ்வென்றால், உனக்குத் தெரியாதா? கதாசிரியன், கதை எழுதுவதோடு மட்டுமல்லாமல் கவிதை புனைந்து, கவிஞனாகவும் மாறுவதற்குத்தான் சுவாமிகள் இரட்டை வாழ்வென்று கூறினார். மேலும் எழுத்தாளன் என்ற தலைப்பில் கவிஞனும் இருப்பான். கவிஞனென்ற தலைப்பிற்குள் கதை எழுதும் ஆசிரியன் வந்து நுழையமுடியாது. அதையும் குறிப்பிட்டுக் கேட்டாரே நுட்பமாய்! உனக்குப் புரியவில்லையா?" என்றார்.

"நாசமாப்போச்சு! எதையெதையோ எண்ணியல்லவா இவ்வளவு நேரம் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தேன்" என்று மனதிற்குள்ளேயே எண்ணிக்கொண்டு பதிலுக்குச் சிரித்தேன்.

"அதிருக்கட்டும். 'சஞ்சீவிச் சாலை' என்றாரே. அது என்ன?"

"ஓ! அதுவா? அது சுவாமிகள் சிவ சக்தியுடன் நேருக்கு நேராக உட்கார்ந்து பேசும் தனியறை. விளக்கம் கேட்காதே. உனக்குப் புரியாது" என்று சொல்லிவிட்டு ஆசிரமத்தைச் சுற்றிக் காண்பிக்க என்னை அழைத்துக் கொண்டுபோனார்.

•

இரவு நெடு நேரமாகி விட்டது.

ஆசிரமத்துக் குடிசையின் வெளிப்புறத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன. யாரோ உளறிப் பிதற்றும் சப்தம் கேட்டது.

சிற்றாற்றின் ஒலியும், சில் வண்டுகளின் சப்தமும் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தன. எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தேன்.

எதிரிலுள்ள புல் தரையின் மேல் நண்பர் திரிசங்கு விழுந்து புரண்டு கொண்டிருந்தார். அடிக்கடி 'சச்சிதானந்தம் — சச்சிதானந்தம்' எனக் கூறிய படி விண்மீன்கள் மினுமினுக்கும் வான வெளியை நோக்கித் தம் இருகைகளையும நீட்டி ஆவேசம நிறைந்த குரலில் கூவிக் கொண்டிருந்தார். இடையிடையே "அரனத்த சஞ்சிவிப் பரவெளிக்கு அழைக்குதே - தருநிறைந்த சோலையிலே தேவமணம் தழைக்குதே-" என்ற கவிதை குரல் கொடுத்தது. அருகில் சென்று அவருடைய கவிதைக் கனவைக் கலைத்தெறிய மனம் ஒப்பவில்லை.

திரிசங்கு, திரும்பத் திரும்ப அந்த அடிகளை விடாது சொல்லிக்கொண்டே இருந்தார். சிறிது நேரம் சென்ற பிறகு அவருடைய ஆவேசம் அடங்கியது. தள்ளாடிக் கொண்டே குடிசைக்குள் வந்து நுழைந்தார்.

இருட்டோடு இருட்டாய் உட்கார்ந்திருந்த என்னைப பார்த்ததும் "யாரடா அவன்?" என்று ஓர் அதட்டல் போட்டார். எனக்குத் 'திக்'கென்றது. சமாளித்துக்கொண்டு "மோகனசுந்தரம" என்றேன். பதிலைக் காதிலே வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

உள்ளே நுழைந்தவர்தான். பொழுது விடியும் வரையில் வெளியில் வரவே இல்லை. நான் கண் விழித்துக்கொண்டிருந்ததுதான் மிச்சம்.

அங்கே இன்னொரு அதிசயமும் எனக்கு வெளியாயிற்று. இரவு வெகுநாழி கழிந்துமகூட 'கார்'களும் வண்டிகளும வந்து போய்க் கொண்டிருக்கும் சபதம மட்டும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டே இருநதது. யார் வருகிறார்கள, போகிறார்களென்பதை அறிந்துகொளள என்னால் முடியவில்லை. அது என்ன மூடுமந்திரமோ அல்லது யோக தந்திரமோ நானறியேன்; பொழுது புலர்ந்தது.

திரிசங்குவிடம் ஊருக்குப் போக விடை பெற்றுக்கொண்டேன. இரவில் நடந்த நிகழ்ச்சியைக் கேட்கவும் நான் தவறிவிடவில்லை. அதறகுத் திரிசங்கு தாடியைத் தடவிக் கொண்டே "கவிதை இயற்றுவதற்கு நேரம் காலம என்று ஏதாவது இருக்கிறதா? ஏதோ வெறி வந்தது. பாடினேன். அவ்வளவு தான்" என்று சொல்லிவிட்டு, உள்ளே போய் ஐம்பது ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொண்டு வந்து என கையில் திணித்தார்.

பாலைவனத்தில் இனிய நீரூற்றுக் கிளமபியமாதிரி இருந்தது எனக்கு. ஒரு மாதத்தின் கவலையை அல்லவா போக்கி இருக்கிறார் திரிசங்கு!

நான் அங்கிருந்து கிளம்பினேன். திரிசங்கு இடைமறித்து "மோகனசுந்தரம நீ இனிமேல் அடிக்கடி இங்கு வரும் வழக்கத்தை வைத்துக கொள்ள வேண்டாம். தெரி

கிறதா? உனக்குப் பக்குவ நிலை போதாது. போய் ஒழுங்காகக் குடும்பத்தைக் நடத்திக் கொண்டிருக்க வழியைப் பார்த்துக்கொள்'' என்று சொன்னார்.

அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்கு அர்த்தம் மூன்று மாதங்களுக்குப் பிறகு தான் எனக்குப் புலப்பட்டது, தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு வரும் போது! அது பின் வருமாறு:

மதுவிலக்குப் போலீசாரின் வேட்டை

''தீர்த்தங்குடி, பிரம்மானந்த சுவாமியின் ஆசிரமத்தில் கள்ளச் சாராயம் ஏழு பீப்பாய்கள் கைப்பற்றப்பட்டன. மேலும், கஞ்சா, அபின், லேகியம் முதலான போதைதரும் பொருள்களையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆசிரமத்திலுள்ள முப்பது சீடர்களும் (இவர்கள் முன்னாள் குடிகாரர்கள்) இதற்கு உடந்தையாய் இருந்தார்களென்ற குற்றத்திற்காகக் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். போலீசார் மேலும் புலன் விசாரித்து வருகின்றனர்''.

இதைப் படித்ததும் என் தலை 'கிர்'ரென்று சுழல ஆரம்பித்தது. அந்த மயக்கத்திலும், ஐம்பது ரூபாய் கொடுத்து உதவிய நண்பர் திரிசங்குவின் உருவத்தை மறக்க என்னால் முடியவே இல்லை. 'சஞ்சிவிச் சாலை' என்ற பெயரைக் கேட்கும் போதெல்லாம் அவருடைய நினைவு தான் என் நெஞ்சை வந்து தொட்டுச்செல்லுகிறது.





உயர்ந்து உல்லாசம் அவர்களுக்கு

16 இதோ மதுரை—2

சென்ற கடிதத்தில் மதுரையின் இரவுக்காட்சிகளில் சிலவற்றைப் படம்போட்டுக் காட்டினேன். தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் இன்னும் ஏராளம் உள்ளன. இக்கடிதத்தில் மதுரையின் உண்மைச் சொரூபத்தை, 'உன்னத லட்சியவாதி'களின் உள்ளக் கிடக்கையை ஓரளவு எடுத்துக் கூறுகிறேன்.

மதுரையின் வரலாறு, வீரப் பிரதாபங்கள், இவைகளை முதன்முதல் எனக்குத் தெரியப்படுத்தியவை சங்ககால இலக்கியங்கள் அல்ல, சென்னை மூர்மார்கட் "வழிப்பறி ஒலிபரப்பிகள்" தாம். சூதாட்ட வீரர்கள் கூடுமிடங்களிலே, "மதுரை ஆசாமி" என்றால், பொய்வார்த்தைகளைப்பொருத்தமாகப் பேசும் 'பொம்மலாட்ட' வியாபாரிக்குக்கூட அச்சம் தான். 'மதுரை'யைச் சரிக்கட்டத் துரிதமான ஏற்பாடுகள் நடக்கும்.

சகதியில்விழுந்த வெண்ணெயைப் போல அந்த 'ஆடுதன்-ஆஸ் - ஆட்டங்காட்டி'களிடம் அரையணாவை வைத்து ஆரம்பித்தவன் 'அழகப்ப'னாயிருந்தாலும் முடிவில் 'பழனியப்'பனாகி விடுவான். மானத்தை மறைக்க ஒரு கோவணம்தான் மீதியாக இருக்கும். அத்தகைய மலைவிழுங்கி மகாதேவன்கள் கூட, மதுரையிலிருந்து வரும் சாதாரணச் சொக்கனைக் கண்டதும், அடப்பந்தாங்கி, ஆட்டத்திற்கும் அவனுக்கும் இடையே ஒரு 'மாகினாட்' அரண் எழுப்பி, அநியாய மரியாதைகள் பல கொடுத்து, கடத்திவிட முயற்சிக்கும் செயலைக் கண்ட போதுதான் மதுரையின் மகிமையில் ஒரு முக்கியமான பாகத்தை நான் ரசிக்க முடிந்தது.

பஸ் - ஸ்டாண்டிலிருந்தோ, பலரை வழியனுப்பி, வரவேற்கும் ரயில் நிலையத்திலிருந்தோ பாதசாரியாய் ஒருவன் வர வேண்டுமானால் 'மூர்மார்க்கட்டுகள்'' அஞ்சும 'மதுரைகளை''த் தாண்டித்தான் வர வேண்டும்.

நாம் நடந்துவந்து கொண்டிருக்கும் பொழுதே, பக்கத்தில்

ஒரு மனிதர், பரமசாது, பாதம் பார்த்து நடந்துவருவார். அவரின் கால்கள், கண்களுக்குப் பளிச்சென வெளிச்சங் காட்டும் ஒரு கலர்ப் பொட்டணத்தை முதலில் தற்செயலாகவும், பிறகு அடுத்தடுத்துத் தவறுதலாகவும் எற்றிக்கொண்டே வரும். திடீரென்று திகைப்பும் திகிலும் கொண்டவர்போல் திடுக்கிட்டு, அதைக் குனிந்து எடுப்பார்.

"என்ன பொட்டணம்?" இப்படி அவராகப் பேசிக்கொள்வார். ஆனந்தத்தைக் காட்டுவதற்காக 'ஆ' வென்று வாயைப் பிளந்து காட்டுவார். நமக்குத் தெரியும்படியாகப் பொட்டணத்தை அவிழ்த்துக் காட்டுவார்.

"ஆ! அழகான தங்கச் செயின்!" அந்த அணியின் பிரகாசத்தைக் காட்டிலும் அவர் கண்கள் ஒளியை அள்ளிவீசும். நம்முடைய மனம் மட்டும் என்ன, அந்நேரம் கல்லாகவா மாறிவிடும்? பாதசாரிக்குத் தன் கால்களிலே அந்தப் பொட்டணம் பட்டிருக்கக் கூடாதா என்ற மனவருத்தம் இருந்தாலும் "எங்கே பார்க்கலாம்?" என்று வாங்கிப் பார்வையினால் அதை எடை போட்டுப் பார்ப்பார்.

"நல்ல நகை! பத்துப் பவுனுக்குக் குறையாது. என்னை யார் நம்புவார்கள்? நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். என் பங்குக்கு ஏதாவது............" இது சாதுவின் முன்னுரை.

"ஹூம்! இது தங்கந்தானா?" இதைக் கூறும்போது, பாதசாரியின் மனம் அந்தச் செயினைத் தன் 'தன் தங்கத்தின்' கழுத்தில் மாட்டிவிட்டதாகவே ஒரு கனவுக் காட்சியைக் காட்டும்.

"நல்லாச் சொன்னிங்க, கண்ணைப் பறிக்குது. இது தங்கமில்லையா?" சாது, சாந்தத்தை இழந்தவர் போலப் பேசுவார்-"அப்ப இன்னொன்று செய்வோம், பக்கத்துத் தெருவிலே ஒரு ஆசாரி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்வோம்" இதை அந்தக் 'கோயபல்ஸ்' கூறி முடிப்பதற்குள் அந்தப் பக்கமாக அவர் கூறிய வஞ்சிப்பத்தரே (தற்செயலாக) வந்துவிடுவார். வந்த ஆசாரி சாதுவின் 'ஆசாமி' என்பது பாதசாரிக்குத் தெரியாது. ஆகவே வந்தவர் பொது மனிதராகிறார். மாற்றுக் குறையாத தங்கம் என்று நிருபணம் ஆகிவிட்டது. அயலாருக்கு ஒன்றும் ஓடாது. உடனே, பத்தோ பதினைந்தோ கொடுத்துச் 'சாது'வைச் சரிக்கட்ட நட்பு நாடகம் நடத்திவிட்டு ஏதோ காணாததைக் கண்டதைப் போல அதிகக்களிப்பிலே,மெய் மறந்து, ஆசாமி மறைந்துவிடுவார். அதற்குப் பிறகு அதிக நேரம் பிடிக்காது, அவர் கையில் இருப்பது அசல் கலப்பற்ற மெருகு தீட்டிய பித்தளை என்று தெரிந்துகொள்ள! அடிவயிற்றில் அடித்துக்கொள்ளலாம்! அடிமேல் அடி அடித்தாலும் அம்மியைத்தான் நகர்த்தலாமே தவிர, பித்தளையை பெண்ணோடு சேர்த்துப் பேரம் பேசச் செய்யும் பொன்னாக மாற்ற முடியுமா?

இது ஒருவகையான தந்திரம். கலியுலகப் பாக்தாத்திருடர்கள் கதைகளிலே காணப்படும் லண்டன் சாமர்த்தியத் திருடர்

கள், தக்கர்கள் இவர்களெல்லாம் மதுரைக்குப் பிச்சை போட வேண்டும்! இருந்தாலும் சென்னை என்னைப் போன்றவர்களுக்குத் தப்புவிக்க வழி காட்டியது. காட்டிய பாதையிலே கண்களென்னும் காமிராக்கள் நுணுக்கமாகப் படம் பிடித்தன. இரண்டாவது ரீல்! இது இன்னொரு வகையான ஹம்பக்!

மற்ற ஊர்களிலும் ஏமாற்று வேலை நடக்கின்றன. ஜனங்கள் ஏமாறுகிறார்கள். ஒரு சில சமயங்களில் ஏமாற்றியும் விடுகிறார்கள். ஆனால் மதுரையில் அதுமட்டும் முடியாது. ஏனென்றால் இவர்கள் கையாளும் முறை மனிதனின் மனப் பண்புகளை அடிப்படையாக வைத்துக் கட்டப்பட்டவைகள். அதில்தான் அவர்கள் சாமர்த்தியம் முழுவதையும் காட்டிவிடுகிறார்கள்.

பேராசைப்படாத மனித உள்ளத்தை இம்மானிலத்திலே பார்க்க முடியாது. அற்ப உழைப்பில் அசையாமல் இருந்து இன்பம் அனுபவிப்பதற்குத் தான் அனைவரும் விரும்புவார்கள். குறைந்த செலவில் நிறைந்த பொருள் என்றால் யாருக்குத்தான் பேராசை இருக்காது! இப்படிக் காசில்லாமல் ஓசியாகச் சாமான்கள் கிடைக்கிறது என்று கருதிப் பிளக்கும் வாய்களிலே, கடப்பாரைகளையும் கற்களையும் வைத்து அமுக்குவதுதான் 'மதுரைப் பாக்தாத்' களின் தந்திரம். இதோ படம்!

ஒரு அணாக் கொடுத்து ஒரு சீட்டு எடுத்தால் ஒன்பது ரூபாய் பெறுமான நிலைக்கண்ணாடி, ஏழு ரூபாய்க்குக் குறையாத வெற்றிலைப் பெட்டி, ஒரு செம்புப் பாத்திரம், டம்ளர், முகம்பார்க்கும் கண்ணாடி, டார்ச் லைட், சீப்பு, குத்து விளக்கு இவைகளிலொன்று அதிர்ஷ்டப்படி கிடைக்கும் என்று ஒரு "பெரிய மனிதர்" கூவிக் கொண்டிருப்பார். அவருக்குப் பக்கத்தில் ஒரு பலகையில் நானாவிதமான பண்டங்கள் பரவிக் கிடக்கும். கையாட்கள் பக்கபலமாகச் சூழ்ந்து நிற்க, இந்தத் 'தம்பிரான்' தனது தயாள குணத்தைப் பறைசாற்றுவார்.

முதலில் ஒருவர் ஒரு அணாக் கொடுத்து ஒரு சீட்டு எடுப்பார்! அந்தக் கூட்டம் முழுதும் ஒரே அமளி! "அடித்தாரையா! பஸ்ட் பிரைஸ்! டார்ச் லைட் ஒன்று! சாமான் வேணுமா? கிரயம் வேணுமா?" என்று கேட்டுக் கொண்டே, "இந்தா ஐந்து ரூபாய் கிரயம்" என்று சொல்லி ஒரு புது ஐந்துரூபாய் நோட்டை எடுத்து வீசுவார். நோட்டை எடுத்துக்கொண்டு கூட்டத்திற்குள் ஓட்டம் பார்க்கச் சென்றுவிடும் அந்தப் பரட்டை!

பக்கத்திலே நின்று கொண்டிருக்கும் 'பட்டிக்காட்டுக்கு' வாய்ஊறும்! எச்சில் கழுத்து வரை வடிந்து விழ மனமில்லாமல் தொங்கிக் கொண்டிருக்கும். பைக்குள் கையை விடுவான்! கனவானின் கண்களில் புதுமலர்ச்சி! ஒருஅணாக் கொடுத்து ஒய்யாரமாக ஒரு சீட்டு எடுக்கும் அந்தப் பட்டிக்காடு. அவன் நினைப்பது போலவே அதிர்ஷ்டம்! "தர்மாஸ் பிளாஸ்க்! கிரயம் ரூ 7" இவ்வளவும் அந்த வியாபாரி வேகமாகக் கூறி விடுவான்! அதற்குப் பிறகுதான் அங்கு சகுனி விஜயம்! அப்புறம்

அவன் வார்த்தைகளிலே பல சாணக்கியர்களைக் காணலாம்!

“தர்மாஸ் பிளாஸ்க் அல்லது இன்னும் மூன்று சீட்டுக்கள், எது வேணும்?” வியாபாரியின் கேள்வி. பிளாஸ்கைக் காதளவில் கேட்டுப் பெற்றவர் மனதில் குழப்பம்! சிந்தனை சுழல்கிறது! பேராசை வளர்கிறது! “ஒரு சீட்டுக்கு ஒரு கூஜா! மூன்று சீட்டுக்கு? என்ன இருந்தாலும் முதலுக்கு மோசம் வராது!” பட்டிக்காட்டின் எண்ணம் இப்படி ஓடும். துணிந்து எடுக்கிறான் மூன்று சீட்டுகளை! ஒரு பெரிய அண்டா விழுகிறது! வியாபாரியின் அந்த நேரச் சட்டப்படி அண்டாவைக் கொடுக்க அதிகாரமிருக்காது. அதற்காக மேலும் ஒரு ரூபாய் கட்டி, இன்னொரு சீட்டு எடுத்தால் இனிமேல் என்ன விழுந்தாலும் சீட்டு எடுப்பவருக்குத் தான் என்ற நிபந்தனையின் பேரில், கையைப் பையிலே துழாவி, காலணாவும் அரையணாவுமாய் கருவாடு வாங்கக் கொண்டுவந்த ஒரு ரூபாயையும் அழுதுவிட்டு ஒரு சீட்டு எடுத்தால், வியாபாரி, விலாவைக் கொல்லும் சிரிப்பை அடக்கிக் கொண்டு, உரத்த குரலில் கத்துவார், “அடித்தாரையா, ஒண்ணாம் நம்பர் பிரைஸ்! காதறுந்த ஊசி ஒண்ணு சினிமா பிலிம் ஒண்ணு சாக்பீஸ், சேப்டிபின் ஒண்ணு” என்று. அல்லது இவ்வளவுக்கும் இன்னும் ஒரு சீட்டு எடுக்கலாம்.

17 அணாவுக்குச் சீட்டு எடுத்தவனுக்கு, 17 பைசா பெறுமான சாமான் கூடக் கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தில் தனது முட்டாள் தனத்தையும் மறந்து அதற்கும் ஒரு சீட்டு எடுப்பான். அதன் முடிவாக, அவன் ஊருக்குக் கால் நடையாக நடந்துசெல்லும் போது கடித்துத் தின்பதற்குக் கையில் கலர் சாக்பீஸ் ஒன்றுதான் மிச்சமாயிருக்கும்! ‘பேராசை பெரு நஷ்டம்’ என்ற தத்துவத்தை நடைமுறையில் நடத்திக் காட்டும்” தத்துவ விஞ்ஞானிகள்” தவழும் மடிதான் கற்கள் கவிதை பொழியும் மதுரை!

மூன்றாவது பேர்வழி உலகஞ் சுற்றிவந்த பெரிய மனிதர்! சில சமயம் ஆங்கிலத்திலும் இடையே தமிழிலும் இந்தியிலும் சரமாரியாகப் பிரசங்க மழை பொழிவார். கோட்டு, பாம்பேகரை வேட்டி, ரிஸ்ட் வாட்ச் முதலான பச்சைப் பகட்டுகளுடன், தன்



பரதேசி:- ஐயா, நமக்குச் சோத்துப் பாட்டுக்குத் திண்டாட்டம் வருங்களா?

ஜோசியர்:- அதுதான் ஒரே அடியாய் அடிச்சுட்டேனே.

பரதேசி:- எப்படிங்க?

ஜோசியர்:- நீங்க எந்த ஊருக்குப் போனாலும் பிச்சை எடுத்தாவது பிழைச்சுக்கிடுவீங்கன்னுதான்.

சிஷ்ய கோடிகள் சூழத் தனது வியாபாரத்தை ஆரம்பிப்பார்.

இவரின் திருட்டுத் தந்திரங்களுக்கு அஸ்திவாரம் ஜீவகாருண்யம்! மக்களின் மேல் அவரும், அவரது "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விலாசம் மாறி வரும்" கம்பெனியும் கொண்டுள்ள கருணைப் பெருக்கு, இவ்வாறு நாடு நாடாய், ஊரூராய், இனமாக மருந்து சப்ளை செய்யத் தூண்டுகிறதாம்!

"வீட்டிற் கொருவர், கிராமத்திற்கு ஒரு பெரிய மனிதர், முன்வாருங்கள்! நோய் குணமானதும் எங்களை நினைத்துப் பாருங்கள்! எல்லாம் வல்ல அம்மா மீனாட்சியின் தயவால் எங்களுக்கு ஒரு நன்றி செலுத்துங்கள்! மருந்துக்காகச் செப்பாலடித்த பைசாக்கூட வாங்குவதில்லை என்று என் குருநாதருக்கு (நூலைவிட்டு ஆகாயத்தில் ஏறி, கடலில் நடந்து, அக்கினியில் குடியிருப்பவர்)சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்! எங்கே, 'பெரியவர்கள்' மட்டும் வாங்கிக்கொள்ளுங்கள்"

பெரிய மனிதர் இப்படிப் பேசுவதற்கு முன் ஒரு சில தந்திர வேலைகள் செய்து காட்டிக் கூட்டம் சேர்த்துவிடுவார். வேடிக்கை பார்க்க வந்த சிறுவர்கள் மாட்டுக்குப்புண்ணுக்கு வாங்க வந்த 'மாடசாமிகள்' மற்றும் கனவானின் சீடர்கள் தான் கூட்டத்தில் நிறைந்திருப்பார்கள். கம்பெனியின் இனிஷியல் என்று கூறப்படும் சில ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட டிரங்கிலிருந்து மருந்து டப்பாக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இனாமென்று அந்தக் கொடையாளி கூறியதும் கூட்டத்தில் ஒரே அமர்க்களம்! ஆனால் ஒருவருக்காவது 'டப்பா' கிடைத்திருக்காது. அதற்குள் அவர் கொடுத்து விடுவாரா? மறுபடியும் வேண்டுகோள் விடுப்பார்.

"விளையாட்டுக்காகப் பலர் மருந்து வாங்க விரும்புகிறார்கள். உண்மையாக எங்கள் மருந்தின் குணத்தைப் பயன்படுத்த விரும்புபவர்கள் மட்டுமே வாங்கலாம்" என்று கூறிவிட்டு உடனே, கூட்டத்தை நோக்கி, "எல்லோரும் மருந்தை வாங்கிப் பரீட்சை பார்ப்பதற்காக வாங்குகிறீர்களா அல்லது அடுக்குப் பானையில் வைத்து அழகு பார்க்க வாங்குகிறீர்களா?" என்பார்.

அதற்குப் பதிலாக எல்லா ஏமாளிகளும் (சீடர்கள் உட்பட) "பரிசோதித்துப் பார்க்க" என்று ஊளையிடுவார்கள்.

"அப்படியானால் நானொரு சோதனை செய்து பார்க்கிறேன்" என்று ஆரம்பித்து, 'ஒருபுட்டி மருந்து எட்டணா தேவை யுள்ளவர்கள் வாங்கலாம்' என்று பிரகடனப் படுத்துவார்.

"ஸார் என்ன, இனமாகத் தருகிறன் என்றார். இப்பொழுது எட்டணா என்கிறாரே என்று நீங்கள் சந்தேகப் படலாம். ஆனால் நான் வாங்கிய பணத்தை வாபஸ் செய்து விடுகிறேன்.காசுகொடுத்த கனவான்கள் தயவுசெய்து போய் விடவேண்டாம். கடைசியில் உங்கள் காசையும் எங்கள் மற்ற மருந்துகளையும் பெற்றுப் பயனடைவீர்களாக" என்பதாகப் பிரகடனத்திற்கு விளக்கவுரை தருவார்.

உடனே கூட்டத்தில் எல்லோரும் வாங்கி விடுவார்கள்.

கனவானின் கைக்குக் காசு வந்துவிடும். பிறகுதான் ஆரம்பிப்பார் தனது 'சத்திய' சோதனையை. 'பேருபகாரி'யின பேச்சே மாறிவிடும். லேசாகக் கனைத்துக் கொண்டு ஆரம்பிப்பார்.

"இந்தக் கூட்டத்தில் எல்லோரும் பெரிய மனிதர்களாகவே (அதாவது ஏமாளிகளாகவே) மருந்து வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அதோ ஒரு சின்னப்பையன் (அவருடைய சிஷ்யன் என்று மற்றவர்களுக்குத் தெரியாது) மருந்து வாங்கிப்பிட்டுக் காசைத் திருப்பித் தருவேனோ மாட்டேனோ என்று பயப்படுகிறான்" (உண்மையில் அவன் மட்டுமல்ல, மருந்து வாங்கிய ம(ா)டசாமிகளது கண்களும் அதைத்தான் பறைசாற்றும்)

பேசிக் கொண்டே 'மாஸ்டர்' பையனை நெருங்கி, "ஏம்ப்பா! நீ இந்த மருந்தைப் பரிட்சை பார்க்க வாங்குறியா, அல்லது ஓசியாக் கிடைக்குதே, ஒரு சானஸ் பார்ப்போம்னு வாங்குறியா?" என்பார்.


"பரிட்சை பார்க்கத்தான், ஸார்!"

"அப்படியானால் நானொரு பரிட்சை செய்கிறேன். இந்த எட்டணாவை நான் எடுத்துக் கிடட்டுமா?"

"எடுத்துக்குங்க ஸார்"

பையன, சொல்லிக்கொடுத்த பாடத்தை ஒப்பித்துவிடுவான். ஆனால் அந்த நேரம் எல்லோருடைய வாயும் 'அடபாவி' என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கும.

"ஸபாஷ்! இந்தப் பையனே இப்படிச் சொல்றான். நீங்க என்ன சொல்றிங்க? இந்த எட்டணாக் காசை நான் எடுத்துக் கிடட்டுமா?"



'குருமூர்த்தி'யின் சீடகோடிகள் அனைவரும் எடுத்துக் கொள்ளும்படி சிங்கநாதம் செய்வார்கள். மயங்கி நிற்கும மாடசாமிகளும் கூட்டத்திற்கு மத்தியில் 'நாணயமாக' நடந்து கொள்கிறோம் என்று தவறுதலாகக் கருதிக் கொண்டு அந்தக் கும்பலோடு சேர்ந்துகொண்டு தங்களுடைய எட்டணாவுக்கும் 'கோவிந்தாப்' போட்டுவிடுவார்கள்.

இருந்தாலும் அவர்களுக்கு ஒரு திருப்தி கையில் மருந்துப் புட்டி இருக்கிறது, கடைக்குப் போனாலும காசு கொடுக்கத் தானே வேண்டும் என்ற கருத்திலே இறுமாந்து போய்விடுவார்கள்.

"களிமண் உருண்டைகளைக் கொடுத்து என்னைக் கொல்லவா பார்த்தாய்?" என்று காத்தாயிகள் கைகளிலே, கட்டையோடு காட்சியளிக்கும் போதுதான் ஒசிக்கு இளித்த மாடசாமிகள் உண்மையை உணர முடியும். 'மதுரை'க்கு அவர்கள் அளிக்கும் 'வாழ்த்துக்களை'க் கற்கள் ஒருநாளும் கவிதைகளாகப் பொழியப் போவதில்லை. ஆனால் கற்பனைகளைக் காட்டி, மக்களை ஏமாற்றக் கருதும் கசடர்களின் மந்தை பெருகியிருப்பதைப் போல, கற்களைச் சாதகமாகக் கொண்டு நடத்தப்படும் வெறி விழாக்களைப் பயன்படுத்தி வெள்ளத்தையும், விரைப்பையும் காட்டி, 'கஜனிமுகம்மது' வேலை செய்யும் கயவர்களின் தொகை, மற்ற ஊர்களில் அருகிக்கொண்டிருக்கும் காலத்தில், கவிதைத் தேன பொழியக் கணக்கு வழக்கில்லாமல் கற்கள் குவிந்து கிடக்கும் மதுரைத் தலத்தில் மட்டும் பெருகிக் கொண்டு வருவதை யாரும மறுக்க முடியாது.

இதுதான் நான் மதுரையைப் பற்றிச் சொல்ல விரும்பிய பாகம். பானைச் சோற்றுக்குப் பாதிச் சோற்றைக் காட்டினாலும் பதம் பார்க்கத் தெரியவில்லை என்று படாடோபத்தின் காரணமாகப் புன்மைகளை மறைக்கப் பாடுபடும் உல்லாசிகளின் அபய ஓலம்தான் இன்று கற்கள் பொழியும் கவிதைகளாகக் கேட்கின்றது.

விளக்கு எரிவதற்கு எண்ணெயை மட்டும் ஊற்றிக் கொண்டிருந்தால் போதாது. அதில் நின்று ஒளி பரப்பும் திரியும் வேண்டும். மக்கள் இன்னும் அறியாமைச் சகதியிலே புரள்கிறார்கள். அவர்களைக் கரையேற்றிக் கல்வி நீரோடையில் குளிப்பாட்ட வேண்டியது அரசியலார் பொறுப்பு. இதை உல்லாசங்கள் உணர்வார்களாக!

வணக்கம்,

வழிப்போக்கன்



செயலாளர்:- இத்தனை நாழி தலைவர் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த உங்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலப்பதிகாரக் காட்சிகள்

வி. சு. திருநாவுக்கரசு

18. பேராற்றங் கரையில் சேரவேந்தர்.

தமிழகத்தின் ஒரு பகுதியான சேர நாட்டிலே கண்ணகி வந்து புகுந்து சிலை வடிவாய் நின்ற செய்தி மலைவாழ் வேடர் மனைமுழுதும் புயலெனப் பரவியது. அதே சமயம் சேர வேந்தனாகிய செங்குட்டுவன் அரசமாதேவியோடு மலைவளங் காணப் பரிவாரங்களுடன் பேராற்றங் கரையிலே வந்து தங்கினான்.

வானத்தை முத்தமிடும் மலைகள். வளம்கொழித்து முழங்கி வரும் அருவிகள். மலர் சொரிந்து மணம் பரப்பும் பொழில்கள். சந்தனம், கோங்கு வேங்கை, கொன்றை, நாகம், மஞ்சாடி மரங்கள் அடர்ந்து இருமருங்கும் நிற்பப் பெருமலை இடையே ஊடுருவிச் செல்லும் பேராறு சேரர்க்கு வளம் நல்கி வருகிறது.

சோழர்க்குக்காவிரியும், பாண்டியர்க்கு வையையும், சேரர்க்குப் பேராறும் வற்றாத வளத்தை உண்டாக்கி வருகின்றன.

மலையிலே உள்ள குறவர்கள் ஆடிய குரவையும் (ஒருவகைக் கூத்து) கொடிச்சியர் நிகழ்த்திய பாடலும் தினைகுற்றும் மகளிரது வள்ளைப் பாட்டும் தினைப்புனத்தில் எழுந்து எதிரொலிக்கும் ஆலோலமும் தேனெடுக்கும் குறவர் ஓசையும் பறைபோல் முழங்கும் அருவியொலியும் புலியொடு பொருத யானை முழக்கமும் குழியிலே விழுந்த யானையைப் பிடிக்கும் பாகரது ஆரவாரமும் ஆகிய இவ்வோசையெல்லாம் மலை முழுதும் எழுந்து எதிரொலித்தன.

சேர அன்னை தன் மக்கட்குப் பாலெனச் சுரந்து அமிழ்தென நல்கிய பேராற்றின் தீம்புனல் கரையிலே செங்குட்டுவன் தங்கிய செய்தியை அறிந்த குறவர்கள் தமக்குரிய வளங்களை எடுத்தும் ஏந்தியும் சுமந்தும் வந்து அவன் திருமுன்னர் நின்றனர்.

யானைத் தந்தம், சந்தனக் கட்டை, சிந்துரக்கட்டி, அகிற் குவியல், அஞ்சனத்திரள், அரிதாரம், ஏலக்கொடிகள், மிளகுக் கொடிகள், கிழங்குவகைகள், தேங்காய், கரும்பு, மாங்கனி, பாலக்கனி, வாழைக்கனிகள், படலைமாலைபூங்கொடிகள், சிங்கக் குட்டி, புலிக்குட்டி, யானைக்குட்டி, கரடிக் குட்டி, குரங்குக் குட்டி, மான் குட்டிகள், கானகக்கோழி தேன்மொழிக் கிளிகள், இவைகளை மலைவாழ் குறவர் மன்னன் முன்னே வைத்து, அவனடி வணங்கி அவன் கொற்றம்

வாழ வாழ்த்தினர். பின்னர்த் தாம் கண்ணுற்கண்ட வியப்பை

கான வேங்கைக்
  கீழோர் காரிகை
தான்முலை இழந்து
  தனித்துயர் எய்தி
வானவர் போற்ற
  மன்னொடுங் கூடி
வானவர் போற்ற
  வானகம் பெற்றனள்

'அரசே! என்ன ஆச்சரியம்.! இம் மலைமீது அதோ தெரிகிறதே அந்த வேங்கையின் நிழலிலே ஒரு காரிகை வந்து நின்ருள். ஒரு முலை இழந்து காணப் பட்டாள். கணவனை இழந்து கடுந்துயர் பெற்ருள். இழந்த கணவனைத் தன் கற்பால் கண்டு அவனொடுங்கூடி மறைந்தாள். ஆ! என்ன வியப்பு!'

எங்நாட்டார் கொல்?
  யார்மகள் கொல்லோ?
நின்னாட்டு யாங்கள்
  நினைப்பினும் அறியேம்
பன்னூ(று) ஆயிரத்
  தாண்டு வாழியர்



முக்காட்டுச்சாமி:- என்ன, மூன்று நான்கு சட்டியுடன் கிளம்பி விட்டீர்?

வெறுந்தலைச்சாமி:- கிடைக்கும் போதே இரண்டு மூன்று நாளைக்குச் சேர்த்து வைத்துக் கொள்ளலாமென்றுதான்.

'அவள் எங்நாட்டவளோ? யார்பெற்ற மகளோ? அறியோம். நினது நாட்டில் அத்தகைய மகளைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. அவள் பல நூருயிரம் ஆண்டு வாழ்க' என்றனர். என்று அவர்கள் சொல்லி வாய்மூடிய சமயத்திலே தண்டமிழ்க் கவிஞராகிய சாத்தனர் எழுந்தார்.

ஒண்டொடி மாதர்க்
  குற்றதை எல்லாம்
திண்திறல் வேந்தே
  செப்பக் கேளாய்

எனத் தொடங்கிய சாத்தனரைச் சேர வேந்தரும் இளங்கோவடிகளும் ஆவலோடு திரும்பி அவர்முகம் பார்த்தனர். சாத்தனர் வாக்கிலே பிறந்த சில மணிமொழிகள் சிலப்பதிகாரச் சுருக்கமாய் அப்பொழுது வெளிப்பட்டன. கதையின் உயிர்நாடிகள் துடிதுடித்து ஒன்றன்பின் ஒன்ருய் வந்தன. 'செப்பக் கேளாய்' என்று தொடங்கிய சாத்தனர் வாக்கிலே 'தீவினைச் சிலம்பு காரணமாக' எனக்கதை ஆரம்பமாகிறது. கதை முழுதும் நுட்பமாய்ப் பரவிக் கிடக்கும் சோக உணர்ச்சிக்குக் காரணமான சிலம்பே கதைவிரியக் காரணமாயும் நின்றதைச் சாத்தனர் எடுத்த எடுப்பிலே புலப்படுத்தக் காணுகிருேம். இளங்கோவின் காவியக்கதை காவிரிப்பூம்புகர் நகரிலே பிறக்கக் கண்டோம் சாத்தனர் வாக்கிலே வைகைநாட்டுமதுரையிலிருந்து வரக்காணுகிருேம சாத்தனர் சிலப்பதிகாரத்தைச் சுருக்கிப் பேசினர். இளங்கோ அதையே பெருக்கிப் பெருங்காவியமாகப் பாடினர் என்று கொள்வதே பொருந்தும்.

ஆய்தொடி அரிவை கண வற்குற்றதும் என மேலே தொடங்கிக் கண்ணகியின் கண வனுக்கு நேர்ந்ததும் என்று கூறினரே யல்லாது நேர்ந்தது இன்னது எனக் கூறவில்லை. கூற நா எழவில்லை. அத்தனை சோகம். என்ருலும் 'தொனிப் பொருளால்' அதை உணர வைத்திருக்கிருர். தன் கையி லிருந்த மற்ருெரு சிலம்பால் மன்னனைக் கண்ணகி வென்ற தும் அதனல் அவன் மடிந்த தும் 'மன்னன் செல்வழிச் செல்கயான்' என்று பாண்டி மாதேவி 'தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடுவாள போல' அவ்வள உயிர் பிரிந்து சென்ற தையும், பின்னர் கண்ணகியின் சினம் தணியாது மதுரையை எரியுண்ணச் செய்ததையும் கூறுவாராய்:

ஆய்தொடி அரிவை
கணவற் குற்றதும்
வலம்படு தானை
மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற
சேயிழை வடிக்கும்
செஞ்சிலம் பெறிந்து
சேயிழை முன்னர்
வஞ்சினம் சாற்றிய
மாபெரும் பத்தினி
அஞ்சில் ஓதி
அறிகெனப் பெயர்ந்து
முதிரா முலைமுகத்து
எழுந்த தீயின்
மதுரை மூதூர்
மாநகர் சுட்டதும்

என உருக்கமாய், உணர்ச்சி மயமாய்த் தாம் மதுரையிலே கண்ணுற் கண்டதைச் சாத்த ஞர் கூறி முடித்தபோது சேர வேந்தரும், இளங்கோவும் அக் காட்சிகளை எல்லாம் தாங்க ளும் மதுரையில் சாத்தனரு டனிருந்து கண்டது போன்ற ஒரு மன உணர்ச்சியை அடைந் தனர். தவறிழைத்த பாண்டிய னும், அநீதியைச் சுட்டெரித்த கண்ணகியும் அவர்கள் உள் ளத்திலே மாறி மாறித் தோன்றி மறைந்தனர்.

மகத்தான படைபலமும், மற்ற பக்க பலமும் வாய்ந்த மன்னவன் முன்னே மங்கைப் பருவமுற்ற ஒரு இளம்பெண் தனியளாய், சிலம்பேந்திய கையளாய் நிற்கும் காட்சியைக் காட்டி அவைகளை மலை என வும் மடு எனவும் சொல்லுமாறு எண்ண வைத்து முடிவிலே மலை இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோக மடு இருந்த இடம் உயர்ந்து போனதை நுட்பமாய்ப் புலப்படுத்து கிருர். இவைகளைச் சாத்தனர் வாக்கிலிருந்து வெளிப்பட்ட 'வலம்படுதானை மன்னவன்' என்பதும் 'சிலம்பொடு சென்ற சேயிழை' என்பதும் தெள்ளத் தெளியக் காட்டி நிற்கின்றன.

மதுரையை வாழ்விடமாகக் கொண்ட சாத்தனர் கண்ணகியின் கற்பறம் நிகழ்த் திய செயல்களைத் தம் கண் ணுற் கண்ட காரணத்தால் அவர் உள்ளமெனும் கோவி லிலே, கண்ணகியார் பத்தினி யாய்—பெரும் பத்தினியாய்— மாபெரும் பத்தினியாய் உருக்க மாய் உருக்கொண்டு விட்டதை நாம் உணருகிருேம்.

இவ்வாறு கூறுவதன் மூலம் கொடுங்கோலின் தன்மையை யும், அதனல் விளையத் தக்க பயனையும் காட்டி உணரவைக் கிருர். எப்படி!

கொற்றவேந்தன்
கொடுங்கோல் தன்மை
இற்றெனக் காட்டி
இறைக்(கு) உரைப்பனள் போல்
தன்னாட்டு ஆங்கண்
தனிமையில் செல்லாள்

நின்னாட்டு அகவயின்
அடைந்தனள் நங்கைஎன்று
ஒழிவின்று உரைத்(து)
ஈண்டு ஊழி ஊழி
வழிவழிச் சிறக்கநின்
வலம்படு கொற்றம்

'சேர வேந்தே! பாண்டியன் செய்த அநீதி இத்தகையது என நின்னிடம் கூறுவாள் போலத் தன்னாடு செல்லாது நின்னாடு நோக்கி வந்தாள். வந்ததால் பெறற்கரிய ஒன்று பெற்றாய். நின்வீரமும் வழி வழிச் சிறப்பதாக!' என்று கூறி முடித்தார் சாத்தனார்.

கேட்ட செங்குட்டுவன் பாண்டியன் முடிவுக்கு வருந்தினான். வருந்தியவனாய்,

'எம்மோ ரன்ன
வேந்தர்க் குற்ற
செம்மையின் இகந்தசொல்
செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்ந்தமை
உறுக ஈங்கென
வல்வினை வளைத்த
கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச்
செங்கோ லாக்கியது

'எம்மைப் போன்ற அரசர்களது செவியிலே தன் பழிச்சொல் படுமுன்னமேயே உயிரைவிட்டு வளைந்து போன செங்கோலை விட்டஉயிரால் நிமிர்த்த பாண்டியன் இறந்தும் நீதியை இறவாது காத்தான். அரசனாயிருந்து குடிகளைக் காத்தல் என்பது எளியதோ? மழைவளம் குன்றினாலும் மன்னுயிர்களுக்குத் துன்பம் நேர்ந்தாலும் மன்னன் அஞ்ச வேண்டியவனாகிறான். கொடுங்கோலுக்கு அஞ்சி செங்கோல் செலுத்தி வாழும் மன்னர் குடிப்பிறத்தல் துன்பமல்லாது இன்பமாக மாட்டாது' எனச் சாத்தனாருக்குக் கூறினான். பக்கம் திரும்பி அரசமாதேவியாகிய வேண்மாளை நோக்கினான். பின்வருமாறு வினவுகிறான்:

உயிருடன் சென்ற
ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்த
இச்சேயிழை தன்னினும்
நன்னுதல்! வியக்கும்
நலத்தோர் யார்?

'இறந்தான் என்றதும் இறந்த பாண்டி மாதேவியும் கணவனை இழந்த சினத்தோடு இங்குவந்த கண்ணகியும் ஆகிய இருவரில் எம் அரசி வியக்கத் தக்க சிறப்பினையுடையார் யாவர்' என்றான்.

பாண்டிமாதேவியின் ஆறிய கற்பையும் கண்ணகியாரின் சீறிய கற்பையும் ஒப்பிட்டு உயர்வு காணல் அத்தனை எளிதாய் அரசிக்குப் படவில்லை. மௌனத்தை மேற்கொள்ளவும் மனமில்லை.

காதலன் துன்பம்
காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு
உறுக வானகத்து!
அத்திறம் நிற்கநம்
அகல்நாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப்
பரசல் வேண்டும்

'பாண்டியன் இறந்தான் என்றதும் இறந்த பாண்டிமாதேவி வானவர் நாட்டில் பெருநலம் பெறுக. நம் நாட்டை வந்தடைந்த பத்தினியாகிய கண்ணகியை நாம் பரவி வழிபட வேண்டும்' என இனிச்செய்யத் தக்கன பற்றிய தன் கருத்தைக் கூறினாள். நிகழ்ந்தன பற்றிப் பேசுவதிலும் இனி நிகழ்வன பற்றிப்பேசுதலே சால்புடைமை யாகும் என அவள் எண்ணினாள் போலும்!

இப் பெண்டிர் இருவரின் கறபை ஒரு பெண்ணை மதிப்பிட வல்லவள் என எண்ணிய சேரனுக்குக் கண்ணகியே நம் மால் வழிபடத் தக்கவள் எனக் கூறுமுகமாகத் தன் முடிவைக் குறிப்பால் புலப் படுத்திய அரசிவேண்மாளை அரசர்க்குத் தகுதியான அரசியாய்க் காட்டிச் செல்லக் காணுகிறோம்.

வேண்மாளின் விருப்பமே தன் விருப்பமாகக் கொண்ட வேந்தன் அமைச்சரை நோக்கினான். நோக்கிய நோக்கிலே பொருளுணர்ந்த அமைச்சர், 'பத்தினிக்குச் சிலை எழுப்ப வேண்டும். அதற்கு பொதிகை மலையிலிருந்தாவது இமயத்திலிருந்தாவது கல்எடுத்துக் கங்கையிலும் காவிரியிலும் தூய்மைப்படுத்திக் கொண்டு வர வேண்டும்' என்றனர். கேட்ட செங்குட்டுவன்:

> பொதியிற் குன்றத்துக்
> கற்கால் கொண்டு
> முதுநீர்க் காவிரி
> முன்றுறைப் படுத்தல்
> மறத்தகை நெடுவாள்
> எங்குடிப் பிறந்தோர்க்குச்
> சிறப்பொடு வரூஉம்
> செய்கையோ அன்று

'வேந்தர்குடிப் பிறந்து வீர வாள் ஏந்திய யாம கண்ணகியார்க்குப் பொதிகையில் கற் கொண்டு காவிரியின் பூம்புனலில் நீராட்டல் வீரமுமாகாது; வீரர்செய்யும் வழிபாடுமாகாது; அது சிறப்புமல்ல; செய்கையுமல்ல. எனவே இமயம் செல்ல வேண்டும். கல்லெடுக்க வேண்டும். அதைக் கங்கையில் நீராட்ட வேண்டும். இமயத்தில் கல்லெடுக்க இமயவனே (சிவனே) தடையாயினும் நாம் அஞ்சப்போவ



தில்லை. வடவர் தடையாயின் அவரை வெற்றி கொள்வோம். வஞ்சிசூடி வடதிசை நோக்கிச் செல்வோம்' என அவன் கூறி முடித்தபோது அஞ்சாத ஆண்மை அவனுக உருக் கொண்டதோ என அமைச்சர் கள் எண்ணினர்.

வில்லவன் கோதை என்னும் அமைச்சன் எழுந்து வாழ்த் தொடு வணக்கங்கூறி 'முன் னொருநாள் உன்முன்னே கொங் கர்கள் கொடிஇழந்து ஓடினர். சோழனும்பாண்டியனும புலிக் கொடியையும்கயற்கொடியையும் போரிலே விட்டு ஓடினர். இவ் வெற்றியின் முழக்கம் திக் கெலாம் கேட்டது. கொங்கர், கலிங்கர், கருநாடர், ஆரியர் ஆகிய இவர்களுடன் தமிழ்ப் படைகலந்தபோது

வடவாரிய ரொடு
வண்தமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டம்
என்கட்புலம் பிரியாது

'நீ உன் யானைப்படையை விட்டுப்பகைவரை வேட்டையா டியகாட்சி வாகைசூடிய கோலம் இன்றும் என் கண்ணைவிட்டு அகலவில்லை. எங்களுக்கெல் லாம் கோமகளும் நினக்குத் தாயுமான நற்சோணையை நீ கங்கையிலே நீராட்டிய நாளில் ஆரிய மன்னர் ஆயிரவரை நீ ஒருவனுக நின்று வென்ற காட் சியை விழித்த கண் மூடாது வியந்து கண்டான் எமன். கட லால் சூழ்ந்த இவ்வுலகமெல் லாம் ஒரேதமிழகமாக்க நீ எண் ணினையானுல் அதை எதிர்த் துத்தடைசெய்யவல்லார்யார்?'

கங்கைப் பேர்யாற்றுக்
கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை
ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர்
ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய
செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது
கடுங்கண் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத்
தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை
யாயின் ஏற்பவர்
முதுநீ ருலகில்
மூழுவது மில்லை

'எனவே இமயமலைக்குச் செல்வது போர்விரும்பி அல்ல. கண்ணகியார்க்குக் கல்லெ டுத்துவர எண்ணியே யாகும். வடநாட்டு மன்னர்க்கெல்லாம் இவ்வருகையை அறிவித்து மூவேந்தரது முத்திரையாகிய வில், கயல், புலிபொறித்த திரு முகம் அனுபபுவோம்' என்று முடித்தான.

மற்றொரு அமைச்சனுகிய அழும்பில்வேள் என்பான் "பகைவரது ஒற்றர் எல்லாம் நம் தலை நகரில் தலைமறை வாய்த் திரிவதால் இச்செய்தி அவர்கட்குக் கிடைத்துவிடும்" என்று பணிவுடன் கூறினுன். சேரவேந்தர் தம் உடன் பாட்டைத் தலையசைப்பால் புலப்படுத்தினுர். பின்னர் பேராற்றங்கரையிலிருந்து எல் லோரும் புறப்பட்டு வஞ்சிமா நகர் புகுந்தனர். ●

அவர்கள் ஆசை!

இரு ஆசிரியர்களிடையே பின் வரும் உரையாடல் நிகழ்ந்தது.

"கல்வித் திட்டம் உருப்பட வேண்டுமானுல், ஆசிரியர் கட்குக் குறைந்தது ரூ 500/- ஆரம்பச் சம்பளமாகத் தர வேண்டும்"

"அப்படியெல்லாம் செய்வ தென்று தொடங்கிவிட்டால் ரூ 1000/- ஆரம்பச்சம்பளமா யிருப்பதே சரி"



ஏழாம் அத்தியாயம்

வீழ்ந்தது!

முடின் கான் அந்தக் கள்ளனை விட்டுவிட்டு நேராகச் சுபேதாரைச் சந்திக்கக் குதிரையில் பறந்து சென்றான். சுபேதார் தன் அந்தப்புரத்தில் இருக்கும் பொழுதே சந்தித்தான்......அவ்வளவு ஆத்திரம்! வெள்ளையர்கள் பேசிய வீணுரைகளையெல்லாம் கூறி உடனே படையெடுக்க உத்திரவிட வேண்டும்...என்று வேண்டினான்.

“முடின்...உன் விருப்பம் போலப் படை திரட்டி உடனே புறப்படு...நானும் வருகிறேன் அவசியமானால்!” என்று முழு வேலையையும் அவனிடமே ஒப்படைத்தான் சுபேதார்.

படை நல்ல முறையில் அமைந்தில்லை அந்த நேரத்தில் ஆட்களும் குறையாகவே இருந்தனர். முடின் சிந்தித்தான். ஒரு முடிவிற்கு வந்தான். அதிக வீரர்கள் வேண்டும். அவசரமான தேவை. நாளை ஒத்திப் போடவும் கூடாது. இதற்கு என்ன செய்யலாம்? ஒரு வழி அவன் மனதில் பட்டது. சிறையினுள் சென்றான் தனது படைத் தளபதிகள் சிலருடன். பல கைதிகளைப் பார்த்தான். அவன் மனதிலே மின்னலைப் போன்ற ஒரு எண்ணம். இவர்கள் எந்தக் குற்றம் செய்தவராக இருந்தாலும் பரவாயில்லை, உடனே விடுதலை செய்து விடலாம். படை வீரராக்கி விடுவோம்! சிறையில் கிடந்து வாடும் இவர்கள் போர்க்களத்தில் போராடிச் சாவதை மேலென்றுதான் எண்ணுவார்கள்! அப்படியே உத்தரவுமிட்டான்.

பல கைதிகள் வெளியேற்றப் பட்டனர். அவர்களுக்குப் படை உடையும், ஆயுதங்களும் பாசறையிலே அளிக்கப் பட்டன. அவர்களிலே ஒருவன் முடின்கானைச் சந்திக்கப் பிடிவாதம் பிடித்தான். அவன் யார்? அலிவர்திகானால் சிறையிலே தள்ளப்பட்ட அஜிஸ்

கான். கடைசியில் சந்தித்தான் முடின்கானே!

"தளபதி அவர்களே...... வணக்கம்"

"அஜிஸ்...!"

"ஆயுள் கைதியாக அடைபட்டேன் இன்று விடுபட்டேன்..."

"என்ன குற்றம் செய்தாய்?"

"அது பெருங்கதை...பிறகு சொல்கிறேன். எனக்கொரு வரந்தர வேண்டும்! உங்களுடனேயே இருக்கும்படியான வாய்ப்பு வேண்டும்"

"இவ்வளவுதானே... என் மெய்க்காப்பாளனாகவே இரு... என்னை என் நிழல் போலத் தொடரலாம்!"

அஜீஸ் ஆனந்தத்துடன் வெளியேறினான். அவனுக்கு எப்படியும் சூதுக்காரக் கூட்டத்தைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற பேரவா. ஆகவேதான் சிறையிலிருந்து விடுபட்டும் அந்த வேலையை வேண்டிப் பெற்றுக்கொண்டான்!

கொஞ்சமும் முன்னேற்பாடின்றியே முகலாயப் படைகிளம்பிற்று என்றாலும் காசிம் பாஜாரில் வெள்ளையர்கள் எந்த விதமான எதிப்பையும் செய்ய முடியவில்லை. எப்படி முடியும்? தலைமைப் பண்டகசாலையான கல்கத்தாவைக் காப்பாற்ற தக்க முறையில் படை பலம் இல்லை. அதுவும் சுபேதார்— நாட்டின் ஒரே தலைவனின் எதிர்ப்பு அதுவும் முன்பின் அறிவிப்பின்றி! எதிர்பார்க்காத நேரத்தில் சமாளிக்க முடியுமா? ஆகவே சில மணி நேரங்களில் காசிம்பஜார் சுபேதார் காலடியில்!

கல்கத்தாவிற்கு இந்த வீழ்ச்சிச் செய்தி எட்டுவதற்கு முன்னால் வெடிகுண்டுச் சத்தந்தான் கேட்டது! அவர்கள் இருக்கும் பட்டாளத்தைச் செப்பனிட முயன்றனர்! கைவசமிருப்பது இருநூறு வீரர்கள்! அதுவும் அதில் வெள்ளையர் மூன்றில் ஒரு பங்குதான்; அவர்களிலும் ஒரு சிலரே போர்க்களத்திலே நின்றவர்; அதுவும் போரிட்டுப் பயிற்சி பெற்றவர் ஒருவர், இருவரே! வெள்ளையரும் பிறரும் கலந்துள்ள படை கல்கத்தாவிலே உண்டென்று பெருமை யடித்துக் கொண்டார்கள். அவர்களும் நல்ல முறையில் பழக்கப்படவில்லை. பலருக்குத் துப்பாக்கியின் சுடுமுனை எது வென்பதே தெரியாது! இருக்கும் வெடி மருந்துகள் மூன்று நாள்கணக்குக்குத்தான் வரும். இருந்ததையும் ஏற்கனவே அழித்துவிட்டார்கள். பீரங்கி வண்டி யொன்றோ, இரண்டோ ...அதுவும் சக்கரத்திலே 'மக்கர்'...... அவைகள் தான் கோட்டை வாயிலில் கிடந்தன!

கோட்டைக்குள் உணவு நிலைமை மோசம். ஒரு வாரத்திற்குத்தான் போதுமானது. உள்ளே உணவைப் பெருக்கவும் முடியாது. வெளியிலிருந்து கொணரவும் முடியாது.

நல்ல போர்த் தளபதியும் இல்லை. சிலர் போர்வீரர், ஆனால் புத்திசாலிகளல்லர்! மற்றவர்களோ போர்முறையில் மண்டுகள் தாம். சக்தியிலோ, புத்தியிலோ, யுக்தியிலோ வல்லவர்கள் இல்லை. இத்தகைய நிலையில் மிகப் பெரிய படையை

எதிர்க்க ஏவிவிடப்பட்டார்கள் ஸுராஜூவும், முடினும் தாக்குதலை நிறுத்தவே இல்லை. எதிர்ப்பு வரவர மங்கிக் கொண்டே இருந்தது! ஏன்? கோட்டையினுள் குழப்பம், போராட்டம், கூச்சல் குடியேறிவிட்டன. ஒழுங்கில்லை! எங்கும் அல்லோலகல்லோலம்.

ஏக்கம், பயம், ஆச்சர்யம, அழுகை, வெறிச் சிரிப்பு-இப்படி வகை வகையாக வந்து வந்துபோய்க்கொண்டிருந்தன. ஒரு சிலர் உபதேசம் செய்தனர். உபதேசம் அங்கு உபயோகமற்ற வேலை அப்பொழுது! யாரும் ஒழுங்காக இல்லை; இருக்க முடியவில்லை! போராட நினைப்பு இல்லை. நினைப்பு வந்தாலும் நிலைமை பின்னுக்கிழுத்தது. வழக்கம போலப் பணமும் கொடுத்துப் பார்த்தனர். வாங்க மறுத்து விட்டனர். பண முனையை விரும்பவில்லை. குண்டு முனையில் பேசினர்!

வெள்ளைக்காரர்கள் தங்களாலியன்றவரை எதிர்ப்பு முன்னணி அமைத்துப் போராடினர். முகலாயப் பெரும் படையோ வெட்டிச் சாய்த்துப் பிணமலைகளின் மீது ஏறி ஓடிவந்தது! அந்த ஓட்டத்தைப் பார்க்கவே பயந்துவிட்டனர். ஓடிவிட வழி பார்த்தனர். ஓடவா முடியும்...?

கடைசியில் கல்கத்தா வீழ்ந்தது. ஸுராஜ் வெற்றி கொண்டான். சாகுந்தருவாயில் தாதா இட்ட கட்டளையான வெளளையரின் படைக்கலப் பலத்தை அடித்து நொறுக்கிவிட்டதாகப் பூரித்தான். புன்னகை பூத்தான்! முடீனும் மகிழ்ச்சியால் தோள் வீங்கப் பெருமிதப் பார்வையுடன் சுபேதார் பக்கத்தில் வந்துநின்றான்.

எட்டாம் அத்தியாயம்

ஓடவும் முடியவில்லை!

நாசிம்பஜார் வீழ்ச்சியடைந்தது என்று செய்தி எட்டியவுடனேயே ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடி விழுந்துவிட்டது போன்ற அதிர்ச்சியைக் கொடுத்தது! சாதாரணக் குடிகள். சுபேதார் என்ன என்ன கட்டளைகளை இடுவானோ? சித்திரவதை செய்யப்போகிறான். அவன் மூர்க்கன்! அவன் தண்டனைகள் எந்தப் பயங்கர உருவில் அமையுமோ! வெள்ளைத் தோலர்கள் மணிக்கட்டுகளை முறிக்கப் போகிறான். எழுதவே வேண்டாம், எழுதிஎழுதி யெங்கள் நாட்டுப் பொருளைச் சுரண்டியது போதும் என்று சொல்லிச் சொல்லி அடிக்க உத்திரவிடப் போகிறான் வெள்ளை வனிதா மணிகள்... பசியெடுத்த புலிகள் கையிலே சிக்கப் போகிறோம். அவர்களுக்கு அது குதூகல விளையாட்டு. நமக்குக் குலை நடுக்கந்தான்! கல்கத்தா எங்கும் கலவரக் கனவுகள் இம்மாதிரி பலவிதமாக, பலவகையாக கல்கத்தாவே நடுநடுங்கிக் கொண்டிருந்தது!



கல்கத்தாவிலே தோல்வி டிசூடப்போகிறது என்று அறிந்தவுடனேயே வெள்ளைக் காரரின் சரித்திரத்திலே ஒரு பெரிய கரும்புள்ளி விழுந்து விட்டது என்று புரிந்துகொண் டனர். வெற்றிவீரர்களாகவே ந்து வந்து பழக்கப்பட்டவர் ள் என்று பெருமை பேசி ந்த வெள்ளைக்காரர்கள் புறங் ாட்டி ஓடவேண்டிய நிலைமை ந்து விட்டது.

ஆகவே வெள்ளைக்காரர்கள் டிக் கூடிப் பேசினர். குசு சு குரலில் திட்டமிட்டனர். தற்கு? எதிரிப் படையை றியடிக்கவா? அடித்து ரட்டிவிடவா? அல்ல, அல்ல! டவழி பார்த்தனர், பின் ாங்க ஏதாவது உபாயம் ண்டா என்று தேடினர்! பாயம் கிடைத்தது, ஆனால் அந்தத் தந்திர ஏற்பாடு அவர் ள் எளிதாக மாட்டிக்கொள் -வே வழி வகுத்தது!

கி. பி. 1756 ஜூன் மாதம் 18ம் நாள் - அவர்கள் வாழ்விலேயே ஒரு துயரக்கதையை எழுதிக் காட்டிற்று! அன்றுதான் வெள்ளையர்கள் கல்கத்தாவையே காலிசெய்துவிட்டு ஓடிவிடுவது என்று முடிவு செய்துவிட்டனர்.

நடுநிசி, ஒரே இருட்டு!

வெள்ளைக்காரர்கள் அத்தனைப் பேரும் கூடினர். பின்வாங்குவது சரி. அதனை எப்படி முடிப்பது? ஓடிவிடுவது என்றால் அவ்வளவு எளிதான காரியமா? சுற்றிலும் கடல் தரைப் பக்கம் எதிரியின் பீரங்கிப் படை: ஆகவே அவர்கள் தப்பிப் பிழைக்கலாம் என்று முயன்றால் ஒரே வழிதான். அதுதான் அவர்களுக்கு உன்னத வாழ்வளித்த கடல்! கடல் வழியே நள்ளிரவிலே நழுவிவிடுவதுதான் நல்ல மார்க்கம் என்று உணர்ந்தனர்.



இந்த பின்வாங்கு படலத்தை முன்நின்று நடத்துவிக்க இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மானிங்ஹாமும், பிராங்லன்டும். அவர்களின் மேற்பார்வையிலேதான் வாணிபத்தால் இந்திய உபகண்டத்தில் வாழ்வைப்பறித்த வெள்ளையர்கள் ஓடிவிட முயன்றனர்.

கப்பல்கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. ஆனால் யார் முதலில் ஏறிக்கொள்வது? உயிர் தப்பியோடும்போதுகூட முறை பார்க்க முடியுமா? பயமும், பதட்டமும அவர்களை ஆட்டி வைத்தது! சிலர் மானத்திற்காகப் போராட எண்ணினர். ஆகவே பெண்களை உடனே வெளியேற்றிவிட வேண்டும் என்றனர். உடனே சிறுசிறு மூட்டைகளுடன் இளம் பெண்கள் பலர் வேகமாக வந்தனர். அங்கு தடுமாறிக்கொண்டிருந்த கிழவர்கள் மீது பச்சாதாபப்பட்டு, பரிவுடன் அவர்களை முன்னுக்கிழுத்து வந்தனர். சிலர் சிறார்களுக்காக 'வக்காலத்து' வாங்கினர்!

ஆனால் நடந்தது என்ன...? இவர்கள் அத்தனைப் பேரும் ஏறிக்கொள்வதற்கு முன்னால் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்ட இரு பெரு வீரர்களுமே ஏறிக்கொண்டனர். ஸுராஜுவின் பயங்கரத் தோற்றத்தை நினைத்தவுடனேயே அச்சம் வந்து அவர்கள் இதயத்தைக் குலுக்க, வீரம் பறந்தோட, வெட்கம் காற்றிலே பறக்க



ஒருவர்: எங்கே புறப்பட்டீங்க?

மற்றவர்: பையனைத் தேடிக்கிட்டுப் பெரியகுளம், தல்லாகுளம், எர்ணுகுளம் வரைக்குப் போய் வரேனுங்க, பையன் எங்கேயும் அகப்படலேங்க.

முதல்வர்: ஏனுங்க, குளம் குட்டையில் விழுந்தவன் அகப்படுவானுங்களா? ஏதோ நம்ம கஷ்டகாலம், அவ்வளவுதான்.

பெண்கள் ஏறுவதற்கு முன்னாலேயே ஏறிக்கொண்டனர் கப்பலில்! அத்தோடு விடவில்லை! மற்றவர்களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தாம் மட்டும் தப்பினால் போதும், 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று கூறிக்கொண்டு கப்பலைக் கிளப்பிவிட்டனர். கரையிலே நின்றவர்கள் கை தட்டி அழைத்தனர். அலறினர். கதறினர். ஆத்திரக் கூத்தாடினர். அவர்கள் திரும்ப மறுத்துவிட்டனர் — வெகு தீவிரமாக!

பலர் நீரிலே குதித்து நீந்திப்போய்க் கப்பலையடைந்தனர். பெண்டு பிள்ளைகளையும் விடுத்துவிட்டு சில சோற்றுப் பிண்டங்கள் கப்பலிலேபுகுந்துகொண்டனர்! கரையில் கிடந்த எல்லாக் கலங்களும் கிளம்பிவிட்டன. இந்தப் புறங்காட்டியோடும் பொல்லாத வேலை முடிவதற்குள் இரவும் கழிந்துவிட்டது!

காலை மலர்ந்தது.

ஏமாந்தவர்கள் கைபிசைந்தனர். இரண்டே இரண்டு படகுகள் மிஞ்சியிருந்தன. முறையாக என்ன செய்திருக்க வேண்டும்? மக்களை அல்லவா அனுப்பியிருக்க வேண்டும். அதைச் செய்யாதது மட்டுமல்ல, வேறொரு வெட்கங்கெட்ட செயலை மேற்கொண்டார்கள்! காக்கவேண்டிய கவர்னர் துரை டிரேக்கும், போராட வேண்டிய மின்சினும் அந்தக் கலங்களில் ஏறிக்கொண்டு 'கம்பிநீட்டி'விட்டனர்!

ஹால்வெலும் இன்னும் சிலருமே மீதியிருந்தனர். அவர்கள் பின்வாங்குபவர்கள் அத்தனை பேரும் தப்பியோடுகிற வரை எதிர்ப்பைத்தொடர்ந்து நடத்தவே நிறுத்தப்பட்டனராம். அவர்கள் அப்படியே எதிர்த்தனர். அரைநொடியில் சரணடைய வேண்டிவந்தது. ஏன்? தப்பிவிட்டோம் என்று மனப்பால் குடித்தவர்களின் கப்பல்கள் கரையிலே மோதியதால் மேலுஞ் செல்ல முடியாமல் மாட்டிக்கொண்டனர்.

எதனைக் கண்டு அஞ்சியோடினரோ, அதே இடத்திற்குத் திருப்பி அழைத்து வந்துவிட்டது அவர்களது கப்பல். பாவம்! வெள்ளையர் வீழ்ச்சியடைந்தனர். ஓடப் பார்த்தும், ஓட முடியாமல் ஸுராஜுவின் காலில் விழுந்து பணிந்தனர்!

[தொடரும்]

பாரதிதாசன் பரம்பரை



தோழர் சங்கீத பூஷணம் S. M. இராமநாதன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள புதுவயலைச்சேர்ந்தவர். இசையில்வல்லவர் என்பதை அவர் பெற்ற பட்டம் எடுத்துக் காட்டுகிறது. "புரட்சி செய்தால் என்ன?" என்ற பாடல் அவர் புரட்சிக்கவிஞரின் பரம்பரையினர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. [ஆ-ர்.

புரட்சி செய்தால் என்ன?

காலைமுதல் மாலைவரை வயல்கள் தம்மில்
களைப்பார ஓய்வின்றி உழைக்கும் மக்கள்
ஓலையிலே நெல்லென்றே எழுதிப் பார்க்கும்
உலுத்தவொரு நிலைமையிந்த நாட்டிலுண் (டு); அவ்
வேளையிலே பாடுபடா தொருசா ரார்தம்
வீட்டில்நெற் குவிந்திருக்கும்; ஏழை மக்கள்
வேலைசெய்தும் உண்ணவழி இல்லை யென்றால்
மேதினியில் பெரும்புரட்சி செய்தால் என்ன?

ஆலையிலே தொழிலாளி அயர்ச்சி யின்றி
ஆடைகளை ஆக்கிநிதம் குவித்து வைத்தும்
ஏழைமக்கள் வாங்கிஅதை அணிவ தற்கோ
இயலவில்லை; ஏனென்றால் எங்கே யோஓர்
மூலையிலே கொண்டதனை முடக்கி விட்டார்;
மிகலாபம் வேண்டுகின்ற உளத்தி னோர்கள்.
காலநிலை உணர்ந்(து)அவர்கள் திருந்தா விட்டால்
காசினியிற் கடும்புரட்சி செய்தால் என்ன?

பள்ளியிலே பிள்ளைகளைப் படிக்க வைக்கப்
பணவசதி இல்லாத காரணத் தால்,
உள்ளத்து வேதனையால் உருக்கு லைந்தார்
உண்மையிலே பெற்றோர்கள் இந்த நாட்டில்;
எல்லையிலா வரிவிதிக்கும் ஆளவந்தோர்
ஏழைமகன் கற்கவழி செய்யா விட்டால்
துள்ளிஎழும் காளைகளே! நீங்க ளெல்லாம்
சூழ்விடுத்தே அறப்புரட்சி செய்தால் என்ன?

வரும் வழியில்

ஜி. நாகராஜன்

தொப்பூரில் நான் பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன் பஸ் வந்த வழியாகக் காணோம். என் கால்கள் நின்று நின்று வலிக்க ஆரம்பித்துவிட்டன. அருகிலுள்ள கடைக்காரனிடம் கேட்டேன். 'இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது பஸ் வர' என்று சொன்னான்.

'இன்னும் ஒரு மணி நேரமா?' என்று நினைத்துக்கொண்டு நடந்தேன். பாதையைத் தாண்டி வெகு தூரம் வந்தேன். ஒரு மலை. மிகவும் அழகாக இருந்தது. சின்னஞ்சிறு வயதுள்ள ஒரு சிறுவன் ஆடுமாடு மேய்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பையனுக்கும் சற்று தூரத்தில் ஒரு கிழவி. அங்கே கிடந்த குச்சிகளைப் பொறுக்கிக்கொண்டிருந்தாள். மலை மீதிருந்த ஒரு மரத்தில் பத்துப் பதினொரு வயதுள்ள பையன் ஒருவன் குழல் ஊதிக் கொண்டிருந்தான். ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அந்தக் குழலோசையைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

திடீரென்று குழலோசை நின்றது. அவனைப் பார்த்தேன். மந்தையைவிட்டு விலகிச் சென்ற மாட்டை ஓட்ட அவன் ஓடினான்!

சரி. நேரமாகி இருக்கும் என்று திரும்பினேன். பாதைக்கு வந்து சேர்ந்தேன். பஸ்ஸுக்காக மறுபடியும் 'தவ' மிருக்க ஆரம்பித்தேன்.

பதினாறு வயதிருக்கும்! கையில் ஒரு குடை! கொஞ்சம் சிவந்த மேனி! நெற்றியில் ஒரு பொட்டு நீண்டு தொங்கும் பின்னல்! வெள்ளை நிற வாயில் புடவை! ஊதா நிறத்தில் ஜாக்கெட்! நான் நின்ற இடத்தில் அந்த மங்கையும் வந்து நின்றாள். முதலில் நான் கவனிக்கவில்லை. ஆனால் அந்த மல்லிகையின் வாசனை என்னை மங்கையைக் கவனிக்கத்தூண்டியது. பார்த்தேன்! யாரோ ஆசிரியையாக இருக்கலாம். அப்படித்தான் இருந்தது அவள் தோற்றம்!

அவளை அதிக நேரம் காக்க வைக்கக்கூடாது என்றோ என்னவோ, அவள் வந்து சற்று நேரத்திற்கெல்லாம் பஸ் வந்தது. அது நின்றதும் அந்தச் 'சிலை' ஊர்ந்து சென்று ஏறிற்று! பின் சீட்டில் இரு இடங்கள் தான் காலி! அந்தப் பருவ மங்கைக்குப் பின்னால் நான் ஏறினேன்.

"எங்கே போகிறீர்கள்?" என்றான் கண்டக்டர்.

"சேலத்துக்கு" என்று சொல்லிவிட்டுக் கண்டக்டர் இடத்தில் அமர்ந்தேன்.

"சார். அங்கே உட்காருங்கள்" என்றான் கண்டக்டர், அந்தக் கன்னியின் அருகிலிருந்த காலி இடத்தைக் காட்டி.

வேறு வழியில்லை. நான் எழுந்து சென்று அந்தப் பேசா மடந்தைக்குப் பக்கத்தில் பயபக்தியோடு, மூலையோடு மூலையாக ஒட்டி, ஒடுங்கி உட்கார்ந்தேன்.

கண்டக்டர் இரு டிக்கெட்டுகள் கிழித்து என்னிடம் கொடுத்தான். "எனக்கு ஒன்று தானே?" என்றேன். ஆனால் அவன், "உங்களுக்குத் தான்" என்றான். இது என்ன புதுவழக்கமாக இருக்கிறதே என்று நினைத்துக்கொண்டு, ஒரு டிக்கெட்டுக்கு உள்ள பதின்மூன்றரை அணாவைக் கொடுத்தேன்! வாங்கிக் கொண்டான்!

நான் உட்கார்ந்திருந்த இடமோ எனக்குப் போதியதாக இல்லை. அந்த அணங்கை நகரச் சொல்லவோ தைரியமில்லை. அந்த மல்லிகையின் மணம் வேறு தலைவலியை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது!

பஸ் மட்டும் சென்று கொண்டே இருந்தது!

இதற்குள் கண்டக்டர் டிக்கெட்டை எண்ணினான். பணத்தை எண்ணினான். இரண்டும் ஒத்துவர மறுத்தன! பாவம் அவன் என்ன செய்வான்? மறுபடியும் எண்ணினான். அப்போது மட்டும் எப்படிச் சரியாகிவிடும்?

அவனால் பொறுக்க முடியவில்லை. தன் பிரார்த்தனையை ஆரம்பித்தான். "சார், யாராவது டிக்கெட் வாங்கிக்கொண்டு பணம் கொடுக்காமல் இருந்தால் கொடுங்கள்" என்றான்.

யாராவது பேசினால் தானே?

மறுபடியும் ஒரு முறை அதைச் சொல்லி முடித்தான்!

பதில் இல்லை!

"சார். எனக்குத் தினத்துக்கு ஒன்றரை ரூபாய்தான் 'பேட்டா' அதில் இது வேறே பதின்மூன்றரை அணாக்குறையுது. தயவு செய்து, டிக்கெட் வாங்கிக் கொண்டு பணம் கொடுக்காதவர்கள் கொடுத்து விடுங்கள்".

அங்கே மௌனம் நிலவியது!

அந்தச் சமயத்தில் டிரைவர் வேறு கண்டக்டருக்காகப் பரிந்து பேசினான்!

ஒன்றும் நடக்கவில்லை!

கண்டக்டரால் தாளமுடிய வில்லை. ஒவ்வொருவராக டிக்கெட் கேட்டுக்கொண்டு வந்தான். என்னால் சகிக்க முடிய வில்லை.

"என்னிடம் இரண்டு டிக்கெட்டுகள் உள்ளன" என்றேன்.

"எத்தனை டிக்கெட்டுக்குப் பணம் கொடுத்தீர்கள்?"

"ஒன்றுக்குத் தான்!"

"பின் ஏன் இரண்டு? நீங்கள் டிக்கெட்வாங்கவில்லையா?" என்றான் அந்தப் பொற்கொடியை நோக்கி!

"இல்லை!"

"நீங்க ரெண்டு பேரும் கணவனும் மனைவியும் என்று நினைத்துத்தான் இரண்டு டிக்கெட்டுகள் கொடுத்தேன்." ஆத்திரத்தைச் சிரிப்புடன் கலந்து கொட்டினான் கண்டக்டர்.

'கொல்!' என்று சிரித்தனர் பஸ்ஸிலிருந்த அனைவரும்!

சிரிப்பு அடங்காததற்கு முன்பே, ஒரு டிக்கெட்டை எடுத்து அந்த 'மாணிக்க'த்திடம் நீட்டினேன். வாங்கிக் கொண்டு பணம் கொடுத்தாள். நான் வாங்கிக் கண்டக்டரிடம் கொடுத்தேன்!

கள்ளங் கபடமற்ற அந்தக் கிராம மக்கள்-பஸ்ஸில் இருந்தவர்கள் - 'நல்ல ஜோடி ஐய்யா இவர்கள்! இவர்களைக் கணவன் மனைவி என்றுதான் அவர் டிக்கெட் கொடுத்து விட்டார்" என்றனர்.

"ஆமாம்" என்று ஒத்து ஊதினான் கண்டக்டர்.

"நான் அப்போதே சொன்னேன், எனக்கு இரண்டு டிக்கெட் கொடுக்கின்றீர்களே என்று" என்று நானும் கலந்து கொண்டேன்.

"டிக்கெட் வாங்கிக்கொண்டு பணம் கொடுக்காதவர்கள் கொடுங்கள் என்றதால்தான் நான் சும்மா வந்தேன்!" என்று அந்தச் சுந்தரி சொல்லிவிட்டு என்னை ஓரக் கண்ணால் பார்த்தாள்!

மறுபடியும் அங்கே சிரிப்பு தன் ஆதிக்கத்தைச் செலுத்திற்று!

பஸ், சேலம் ஸ்டாண்டுக்குப் போகும் முன்பே நான் பஸ்ஸை நிறுத்தி இறங்கினேன்: நான் இறங்க எழுந்தேனோ இல்லையோ, அவளும் இறங்க எழுந்துவிட்டாள். இருவரும் இறங்கினோம். மறுபடியும் பஸ்ஸிலிருந்து சிரிப்புக் கிளம்பியது.

பஸ் போய் விட்டது!

"மன்னியுங்கள்! என்னால் உங்களுக்கு எவ்வளவு தொந்தரவு" என்றேன்.

"அதனால் என்ன? எல்லாம் கொஞ்ச நேர 'ஜாலி" என்றாள்.

பிறகு போய் வருவதாகச் சொல்லிப் போனாள். அந்த 'மரகதம்' மறையும் வரையில் பார்த்துக்கொண்டு நின்றிருந்தேன், என் ஒரு மணி நேர மனைவியை நான் இனி எப்போது சந்திப்பேனோ தெரியாது!

வரும் வழியில் ஒரு 'ஜாலி'. அவ்வளவுதான்!

..பொது மேடை..

வாசகர்களின் கருத்துரைகளை வெளியிடுவதற்கென்றே இப் பகுதி ஒவ்வொரு இதழிலும் இடம் பெறுகிறது. 'பொன்னி'யைப் பற்றி மட்டுமல்ல, உள்நாட்டு, வெளிநாட்டு நடப்புகளில் எதைப் பற்றியும் அன்பர்கள் தத்தம் எண்ணங்களை, எழுதியனுப்பலாம். ஒரு 'கார்டு'க்குள் அடங்கியிருப்பது நன்று.

சென்னை
17-10-49

☆ வைதீகம் மடிந்தது

பொன்னி! மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் தயாபரியே வணக்கம்! 25-9-49ல் வெளிவந்த நீ, என் இல்லத்தில் புகுந்து என் தாத்தா போதையை விலக்கியருளினாய்! உன்னை வாயாரப் போற்றுகிறேன். உன் சமூகத் தொண்டு, கண்ணுக்கினிய, கருத்துக்குரிய கட்டுரைகளாலும் கவிதைகளாலும் மக்களுடைய அஞ்ஞானத்தை அகற்றி, அறிவையூட்டும் அமுத சுரபியாக விளங்குவதில் ஆச்சரியமில்லை. அன்றைய உன் திருமலர் இதழில் எழுந்தருளிய "பட்டினிச்சாமி" என்ற கதையை என் தாத்தாவுக்குப் படித்துக் காட்டினேன். எங்கள் பேட்டையில் ஆண்டுதோறும் பொன்னியம்மனுக்கு, ஆடு கோழி பலியிடுவதை இந்த ஆண்டு வேண்டாமென்று தீர்மானித்து விட்டார். அது மட்டுமல்ல, கல்லுக்கு இனி அபிஷேகம் கிடையாது என்று பெருமாள் கோவில் பட்டாச்சாரிக்கும் சொல்லி விட்டார். வைதீகத்தை அவர் உள்ளத்திலிருந்து விரட்டியடித்த உனக்கு என் குடும்பச்சார்பாகக் கோடி வணக்கம். ஆனால் ஒரு குறை. என் தங்கை, தம்பிகள் 'பாலர் பகுதி' இல்லையே என்று அம்மாவிடம் சொல்லி உன்னைத் தூரத்தப் பார்க்கிறார்கள். மேலும் என் அண்ணன் "தொடர்ச்சிகள்" அதிகமாக இருக்கின்றனவே என்று குறை கூறுகிறான். இவர்களுடைய மனக்குறைகளை நீ தான் நீக்கி 'பொன்னியம்மன் போய்ப் பொன்னி வந்தது டும் டும்' என்று பறைசாற்றி, அவர்களை மகிழ்விப்பாய் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

K. T. தனலெட்சுமி

[சிறுவர் அரங்கம் அடுத்த இதழிலிருந்து வெளிவருகிறது. 'அத்தான்' சிறுவர் சிறுமிகளுக்குச் சுவைமிக்க கதைகள் பல சொல்வார்; சுவைக்கலாம். – ஆசிரியர்]

○●○

கடலூர்
12-10-49

கம்பதாசர்களுக்குக் காணிக்கை

உலக வரலாற்றில் முதலிடம் பெற்றிருந்த தமிழகம், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழரின் சுயமரியாதையைப் பகுத்தறிவைப் பண்பைப் பாழ்படுத்திய பழமைப் பாசி படர்ந்த—புற்றரை நாடி வந்த புல்லர்களின் புளுகுப் புராணங்களின் இடையிலே சிக்கிச் சீரழிந்து எழில் குன்றி, இலக்கியம் இழந்து, இருண்ட வீடெனக் காட்சியளித்தது. தருக்கரின் நுழைவால் தன் புகழ் இழந்த தமிழகத்தில் சுயமரியாதைச் சுடரொளி வீசத்தொடங்கியது. அதுபோது தமிழர்களின் கண் முன், கம்பனின் காவியத் தோட்டத்தில் காமரசக் கற்றாழைகள் கணக்கின்றி வளர்ந்து நிற்பது நன்றாகத் தெள்ளத் தெளியத் தெரிந்தது! மறைந்து கிடந்த மாணிக்கங்களான சிலம்பும், கலிங்கத்துப் பரணியும், அகமும் புறமும் அழகு தமிழணங்கின் அழியாச் செல்வங்

களென நாட்டு நல்லறிவாளர்களி னிடையே நடமாடின! கம்பனின் கல்லறைக் காவலர்கள் கனல் கக்கும் கண்களோடு, 'கம்பனின் காவியத்தைக் கற்றுணராக் கசடர்கள்' என்று அறிஞர் அண்ணா அவர்கள் 'கம்பரசம்' தயாரிக்கும் வரை கூவிக் கொக்கரித்தனர். 'அந்த ஆள் ஐந்தடிதானே உயரம்; பார்ப்போம் அவர் திறனை' என்று எண்ணி ஏமாந்த சோமசுந்தரனாரும், சொல்லின் செல்வர் சேதுவும் சொற்போர்க்களத்திலே தமது கம்பனுக்காகப் பரிந்து பேசி, புறங்காட்டும் திறன் காட்டினர் 1944ல்! கல்லூரிக் காளைகளின் கரங்களிலே மட்டுமல்ல, 'கனம்'களின் • கனவிலே கூடக்காட்சிதரத் தொடங்கிற்றுக் கம்பரசம்!கம்பதாசர்களைக் கண்ணீர் சிந்தச் செய்து, ஒப்பாரி, வைக்கச் செய்தன, ஒப்பற்ற ஒன்பது டோஸ்கள்! 'கம்பரசத்திற்கு மறுப்பு' 'கம்பரசத்திற்குச் சாவுமணி' 'கம்பரச ஆராய்ச்சி' இப்படி ஏடுகளில் எழுதிச் சில்லரை தேடிக் கொண்டனர் சிலர்! அறிஞர் அண்ணா அவர்களை நன்கறிந்த, கதிரேசர்கள், டி. கே. சி., பி. ஸ்ரீ. கள் எல்லாம் மறுப்பு எழுத வகையின்றி மூலையில் உட்கார்ந்திருப்பதை மறந்துவிட்டனர், இந்த அப்பாவிகள்! 'அறுபது ஆயிரம் கம்பரசங்கள் வெளி வந்தாலும், கம்பன் காவியத்தை அழிக்க முடியாது' இப்படி 'டாண்' என்று ஒலித்து விட்டார் தினமணியார்! ஒன்பது டோஸ்கள் வந்த பிறகுதான் 'கம்பன் விழா'வுக்குக் போலீஸ் பாதுகாப்பு தேவைப்பட்டதென்பதை 'மணியார்' மறந்துவிட்டார்! அவர்கள் மயக்கம் தெளிய, இன்னும் சில 'டோஸ்கள்' வெளியிடவேண்டுகிறேன், அறிஞர் அண்ணா அவர்களை!

க. கூடலரசன்

○●○

ஜான்ஸி
17-10-49

உள்ளக்காதலி

புதுக்கோட்டையிலிருந்து புத்தாடை உடுத்தி, புன்முறுவலுடன் இவ்விடம் வந்து என் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறாள் பொன்னி. பல இராணுவத் தோழர்கள் அவள் மாட்டுக் காதல் கொள்கிறார்கள். "பொன்னி" என் உள்ளக் காதலி, அவளிடம் நான் காதல் கொண்டு ஒரு ஆண்டுக்கு மேல் ஆகிவிட்டது. என் உள்ளத்தைவிட்டு அவள் வெளியேறமாட்டாள் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குண்டு, என் உள்ளத்தில் அவளை உயிரோவியமாக எழுதி மகிழ்கிறேன். "பொன்னி"யின்பால் இவ்வளவு அன்பு கொள்வதற்குக் காரணமில்லாமலில்லை. சேற்றிலே ஊறிப் போய் முடைநாற்றம் வீசும் சமூக சட்டதிட்டங்களை அவள் சாடுகிறாள், ஒருவர் உண்டுகளிக்க, சிலர் உல்லாசமாக வாழ, பலர் பட்டினியுடன் பரிதவிக்கும் பரிதாபக் காட்சியைப் படம் பிடித்துக்காட்டுகிறாள். ஊரை எத்திப் பிழைக்கும் உன்மத்தர்களை உதறித் தள்ளுகிறாள். மகா வீரனானாலும் சரி, மகேசுவரனானாலும் சரி குற்றத்தைக் குற்றமெனக்கூறிக் கண்டிக்கச்சிறிதும் தயங்காத தூய உள்ளம் படைத்தவள். சிந்தனையைக் கிளறும் சிறுகதைகளும், பகுத்தறிவைப் பரப்பும் பாட்டுகளும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தொடர்கதைகளும் அவள் பால்மிளிர்கின்றன. "பொன்னி" நல்லாள் தான் கொண்ட குறிக்கோளை இடைவிடாதுமக்கள்மன்றத்தில் பரப்பிப் பல்லாண்டு நிலவ வாழ்த்துகிறேன்.

கா. பழனிச்சாமி

○●○

மதுரை
15-10-49

இதோ மதுரை

'மதுரை என்றாலே மற்ற ஊர்க்காரர்கள் நடுங்குகிறார்களய்யா!' இந்தவாக்கியம் தங்களது 10-10-49 "பொன்னி" இதழில் உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு வரைந்துள்ள மடலில் வழிப்போக்கன் அவர்கள் குறிப்பிட்டது. அவர் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் மது

மையில் நாள் தோறும் எத்துணையோ நடந்து கொண்டுதான் இருக்கின்றன! மறுக்க முடியாத உண்மை! ஜோப்படி செய்தல், சூது விளையாடல், பெண்களைச் சோரம் செய்தல், அயலூர்க்காரர்களை ஏமாற்றி மருந்து வியாபாரம் செய்தல், வழிப்பறி செய்தல் போன்ற சமூகத்திற்குக் கேடுபயக்கும்செயல்களை, ஆங்காங்கேஒருசிலர்வயிற்றுப் பிழைப்புக்காகக் கைக் கொண்டிருக்கிறார்களென் பதற்குப்பத்திரிகைகளில் வரும் செய்திகளே சான்று! இவ்விதக் கேடுகளைப் போலீசார் கண்டுபிடிப்பது ஒரு சில பத்திரிகைகளில் வந்தாலும், கண்டுபிடிக்கப்படாமல் நடந்தேறி வருவது எத்துணையோ! வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் பரவிவிட்டதால் இது போன்ற சமூகத்துக்குக் கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு எத்துணையோ இளைஞர்கள் கெட்டுத்தான் போகிறார்கள்! இதற்கு மாற்று வழி காணச் சர்க்கார் மனம் வைக்க வேண்டும்.

S. பழனிவேல்

○●○

வேகுப்பட்டி
13-10-49

கம்பரச ஆராய்ச்சி

வெளியூர் 11-10-'49 ஆம் 'தினமணி' மதிப்புரையில் மேற்படி நூலைப்பற்றிய ஆராய்ச்சியின் மதிப்புரை கூறப்பட்டுளது. கம்பரச நூலுக்கு மறுப்பு எழுதவந்த ஆசிரியர், (திரு. முதலியார்) கம்ப நாடகம், கம்ப சிருட்டி, கம்பசித்தம், கம்ப சூத்திரம் என்பனவற்றை விளக்கியிருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்தே அவரின் மறுப்பு தெற்றென விளங்குகிறது. மதிப்புரை எழுதுபவர் எழுதுகின்றார்:- "கம்பனில்லாமல் தமிழுமில்லை, தமிழ்நாடுமில்லை, இன்று கம்பராமாயணத்தை நீக்கிவிட்டுத் தமிழ் எப்படியிருக்கும் என்று யாராவது கற்பனை செய்துபார்க்க முடியுமானல், அவர்களுக்குத்தான் அந்த அலங்கோலம் புரியும்" என்று எழுதுகின்றார். தமிழ் இன்றும் அழியாமல் இருப்பதற்குக் காரணத்தை மதிப்பாசிரியர் மிகத் துன்பப்பட்டுக் கண்டுபிடித்துள்ளார். சங்க இலக்கியங்கள், ஐம்பெரும் காப்பியங்கள், திருக்குறள், தொல்காப்பியம் போன்றவை அப்பெரியாருக்குப் பிடிக்கவில்லை யென்பது இக்கூற்றிலிருந்தே தெரிகின்றது. தமிழகமே! இப்பெரியார்களிடமிருந்து எப்பொழுது விடுதலை பெறப் போகின்றனையோ அறியேன்!

ஆ. பழ. குமரப்பன்

○●○

உளம்பட்டி
14-10-49

அமெரிக்கா காட்டும் ஆர்வம்

மறைவாக நமக்குள்ளே
பழங் கதைகள்
பேசுவதி லோர் மகிமை யில்லை
திறமான புலமை யெனில்
வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல்
வேண்டும்

என்று அன்றொருநாள் பாடினார் பாரதி. அவர் பாடியதற்கேற்ப இன்று இந்தியாவின் பிரதம மந்திரி நேருவை அமெரிக்கா குதூகலத்துடன் வரவேற்கிறது, ஆனல் தாங்கள் 10—10—49 இதழில் குறிப்பிட்டிருந்தபடி 'இந்தியா' அமெரிக்காவின் கைப்பாவையாக மாறிவிடக் கூடாது. முன்னர்—இங்கிலாந்து—நம் நாட்டிற்களித்த வரவேற்பு — காமன்வெல்த்தில் இந்தியாவை மிகலாகவமாக இணைத்து விட்டது. அதேபோல இப்பொழுது அமெரிக்கா அளிக்கும் வரவேற்பும் ஏதாவது ஒரு புதிய பிணைப்பில் இந்தியாவை இணைத்துக்கொள்ளாத வகையில் நம் தற்காலிகப் பிரதிநிதியான நேரு அவர்கள் நடந்து கொள்ளவேண்டும். சென்ற ஆகஸ்டில் அமெரிக்காவின் கைப்பாவையான 'உலக பாங்க்' இந்தியாவிற்கு '340 லட்சம் டாலர்' கடன் அளித்தது. அதன் பின்னரே பிரிட்டன் தனது ஸ்டர்லிங் மதிப்பைக் குறைத்துக் கொண்டது. ஆகவே

ஏற்கெனவே கடனாளியாகியிருக்கும் இந்தியா தனது தொழில் வளத்தையும், நில வளத்தையும் பெருக்கிக்கொள்ள, மிக விரைவாக முயலாவிட்டால் வெளி நாடுகளில் இப்பொழுதுள்ள மதிப்பை வெகு விரைவிலேயே இழந்துவிட நேரிடும். சூரியனே அஸ்தமித்துக் கொள்ளாத அளவு பிரம்மாண்டமான சாம்ராஜ்யம் படைத்திருந்த—பிரிட்டனுக்கே இப்பொழுது தரித்திர நிலைமையென்றால் நம் நாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே நம் நாட்டில் உள்ள பொருட் செல்வர்களும், அரசியல் தலைவர்களும் நம் நாட்டின் தொழில் வளத்தையும் நிலவளத்தையும் முன்னேற்றம் அடையச் செய்ய முயல வேண்டும்.

ம. சி. திருமலைசாமி

○●○

கரூர்
13-10-49

முன்னேற்றப் பாசறை

சாய்வுப் பாதையிலே சென்று கொண்டிருந்த சீன நாட்டைச் சரிப்படுத்த முனைந்தான் சன்யாட்சென். திராவிடத்திலும் ஒரு சன்யாட்சென் தோன்றிப்பழமையை, பார்ப்பனியத்தைச் சாடினார். ஆனால் திடீரென்று திராவிடத்தின் சன்யாட்சென் சியாங்காக மாறுவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமுடியாது. சன்யாட்செனின் மறுபிறவி என்று எண்ணிவந்த கோமிண்டாங் தலைவர் சியாங் பாசிசப் பாதையில் கால்வைத்த தன் பயனாக உரிமைப் படையின் தளபதி மாசிடாங் தனி முகாம் அமைத்தார். பகுத்தறிவியக்கத் தந்தையின் போக்கு சரியில்லை. எனவே பாதை பிரிந்தது. கொள்கைக்காக வாழ்வோரின் கூட்டு முன்னணியில் திராவிட முன்னேற்றக் கழகம் உருவானது. மிகப் பெரியநிலப்பரப்பு மாசிடாங் கைக்கிழ் வந்தது. எஞ்சியது கொஞ்சம். சீனு சிவப்பாகிறது இதற்காக, பெருவாரியினர் முன்னேற்றக் கழகத்தில். விலகி இருப்போர் சிறு தொகை. இதற்காகத் திராவிடம் செந்நிறம் அடையவில்லை. நேர்மை இங்கேதான் தலைகாட்டுகிறது. சியாங்கினின்று மீட்சியடைந்த சீனத்தை வாழ்த்துகிறோம். சர்வாதிகாரப் பிடியினின்றும் விலகிய முன்னேற்றக் கழகத்தை வரவேற்கிறோம். மாசிடாங்கின் உரிமைப்படை, அண்ணாவின் முன்னேற்றப் பாசறை-அங்கேயும் இன்னும் திட்டம் தீட்டப்படவில்லை. இங்கேயும் கன்னி நிலை. ஆனால் திட்டம் உருவாகி விட்டால்......? இதற்கான விடை காலத்தின் கருவில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

"கனலவ்"

○●○

பம்பாய்
13-10-49

ஒரே குறை

நான் பொன்னி ஆரம்ப முதல் படித்துவருகிறேன். பல உண்மைகளை உணர்ந்தேன். எனது நண்பர்களிடமும் கொடுத்து (பார்ப்பனர்களிடம்) படிக்கும்படி வற்புறுத்தி உள்ளேன். அவர்களும் பொன்னியை வரவேற்கிறார்கள். எனக்கு ஒரு குறைதான் அதாவது குறிப்பிட்ட தேதிக்கு இங்கு கிடைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதோடு அப்படியே அனுப்பும்படி செய்வீர்களெனவும் நம்புகிறேன்.

ம. கு. பாலுசாமி

○●○

கள்ளக்குரிச்சி
14-10-49

முழு நிலவு

நம் "பொன்னி" யைப்பற்றித் தோழர்கள் பலர் தீட்டியிருந்த கருத்துரைகளைச் சென்ற இதழில் கண்ணுற்றேன். அவரவர் தத்தம் ருசிக்கு ஏற்றபடி தமது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆம். ஒவ்வொருவரும் 'பொன்னி'யை ஒவ்வொரு கோணத்திலிருந்து நோக்கி இருக்கின்றனர். அவர்களது அபிப்பிராயங்கள் அனைத்தும் சரிதான்!

'பொன்னி' பல்வேறு சுவை கொண்ட நமதுதோழர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வது விந்தையான ஓர் உண்மைதான்! திராவிடத்தின் இரு கண்கள் போன்றவை, "பொன்னியும்' 'திராவிடநாடும்' திராவிடத்தின் காளான்களைச் சுட்டெரிக்கும் கதிரோன் திராவிட நாடு என்றால் களர்நிலத்தை விளைநிலமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் உள்ளங்களுக்குத் தண்ணொளிமூலம் உற்சாகமூட்டும் முழுநிலா "பொன்னி". சிலம்பொலி முழங்கப் பாய்ந்தோடிவரும் 'பொன்னி' வறண்ட திராவிடத்தை வளமாக்கவந்த ஒரு ஜீவநதி என்பதில் தடையென்ன!

சு. பெரியதம்பி

○◉○

ரேப்பாளையம்
15-10-49

எங்கணும் காணேன்

நான் படித்துள்ள இதழ்கள் பலவற்றுள்ளும் பொன்னி போன்று இனிமையுடைத்தாயும், திராவிடருக் கேற்றதாயும், கதையால் மட்டுமல்ல — கட்டுரை கவிதைகளால் தமிழனின் தன்மானத்தையும், எழுச்சியையும், விழிப்புணர்ச்சியையும் தரணி எங்கும் எடுத்துக் காட்டுவதாயும் திங்கடோறும் தக்க தினங்களில் இருமுறை மலர்ந்து திடசித்தத்துடன், உள்ள உறுதியுடன் வீறுகொண்டு உரிமைக்குப் போரிடும் திராவிடனுக்கு உற்ற துணையாக — ஏற்ற உதவியாக — உயிர்த்தோழனை விளங்குவதாயும் பாட்டாளிகட்கும், உழைப்பாளிகட்கும் ஏழைமக்கட்கும் ஏற்றதாயும் ஆளவந்தார்கட்கு அவ்வப்போது அறிவுரைகளை அளிப்பதாயும் உள்ளவேறொரு இதழை எங்கணும் காணேன். காலத்துக்கேற்ற கருத்துகள் நிறைந்த, எளிய இனிய, ஆனால் சிந்தனையைத் தூண்டி விடுகின்ற எழுத்தோவியங்களும், பைந்தமிழ்ப் பாக்கள் பலவும், நாட்டு நடப்பை நல்லமுறையில நவிலும்

> **முன்னேற்றம்**
>
> சர்வாதிகாரத் தன்மையிலிருந்து ஜனநாயக முறைக்கு முன்னேறி இருக்கிறோம்; கண்மூடித்தன்மையில் இருக்க மறுத்து விழிப்புள்ள நிலைக்கு முன்னேறியிருக்கிறோம்; முட்டாள்களாக இருக்க ஒப்பாமல் சிந்தனைச் சிற்பிகளாக விளங்க முன்னேறியிருக்கிறோம்; அமைப்பற்ற முறையிலிருந்து அமைப்போடு கூடிய நிலைக்கு முன்னேறியிருக்கிறோம்
>
> —இரா. நெடுஞ்செழியன்

நகைச்சுவைத் துணுக்குகளும், அழகிய அட்டையும் பொன்னியின் புகழைப் புவியெங்கும் பரப்புவன.

கே. கிருட்டிணமூர்த்தி

○◉○

பண்ணுருட்டி
13-10-49

களத்திலே கன்னி

பழமை-பகுத்தறிவற்ற தன்மை, ஆகியவற்றை எதிர்த்து மறத்தமிழர் தொடுத்துள்ள போரில்-களத்தில் கன்னியொருத்தி நிற்கக்காணுகிறேன் ஆண்டுகள் சிலவாக. கன்னித் தமிழால் ஆக்கப்பட்ட அறிவுக் கதிர்களே அவள் கையில் உள்ள கருவி! போர்நடப்பதும் மும்முரமாகத்தான் என்றாலும், சோக ரேகை சிறிதும் காணப்படவில்லை அவள் அழகிய முகத்தில்! நீதிக்காகவே போராடும் அந்த நேர்மைக்காரி தன்னலத்திற்காகத் தகாத செயல் புரிந்ததால் - போர் முறைமாறியதால், போர்ப்பயிற்சி தந்த தலைவனை நீக்கி, தளபதியைத் துணையாகக்கொண்டு போராடுகிறாள் என்றால், இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும் அவள் உயரியபண்பிற்கு? கோழை மனத்தினர், ஆய்வுத்திறன் அற்றவர்கள் ஆகியவர்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு "பொன்னி" எனனும் தன்னலமற்ற தனி நங்கையின் வீரம். வளர்க பொன்னியின் போற்றத்தக்க செயல்!

S. M S. யூசுப்

* பரிசுபெற்ற கடிதம்: தோழியர் K. T. தனலெட்சுமி, 19, வைக்கக்காரத் தெரு, புரசைவாக்கம், சென்னை. ரூ. 5/– மணியார்டர் செய்யப்பட்டது.

கலையுலகம்

உயிரோவியம்

''உயிரோவியம்'' பிரசண்ட விகடனில் தொடர் கதையாக வெளிவந்து கொண்டிருந்தபோதே வாசகர்களின மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. கதையின் விறுவிறுப்பும் தெள்ளத் தெளிந்த உரை நடையுமே அதற்குக் காரணம். கதையைப் படித்து முடித்த போது, சமூகத்திற்குப் பயனற்ற உளுத்துப்போன கதைகளையே திரும்பத் திரும்ப வெவ்வேறு பெயர்களில் படம் எடுத்துக்கொண்டிருக்கும் முதலாளிகளின் கண்களில் ''உயிரோவியம்'' போன்ற சிறந்த கதைகள் தென்படவில்லையே என்றுதான் என மனம் வருந்தியது. என் நீண்ட நாளைய மனக் குறையை நாடகக் கலைஞர்களான டி. கே. எஸ். சகோதரர்கள் பூர்த்திசெய்து விட்டார்கள்.



நடராசன்

உண்மையிலேயே தோழர் ''ஜீவா'' அவர்களின் உயர்ந்த படைப்புத்தான் ''உயிரோவியம்''. அந்த அற்புதப் படைப்பை மிகக் கவர்ச்சிகரமான நாடகமாக்கியிருக்கிருர்கள் நாடகக் கலைஞர்கள். கதைப் போக்கும், உயர்ந்த நடிப்பும ஒருமுறை நாடகம் பார்த்தவர்களை மீண்டுமமீண்டும பார்க்கத் தூண்டுகின்றன. உரையாடல்கள் மிக எளிய நடையில் நிலைமைக்கேற்றவாறு அழகொழுக அமைந்திருக்கின்றன. பழந் தமிழரின் காதல் வாழ்க்கையையும, மணமுறைகளையும யாவரும் எளிதில் புரிந்து கொளளும வண்ணம் அன்பர் 'ஜீவா' எழுதியிருக்கிருர். தற்காலக் கல்லூரி மாணவ மாணவியர் அரை குறை ஆங்கிலத்தையும தமிழையும கலந்து பேசும் நாகரிகததை கையாண்டி செய்கிருர்.

கல்லூரி மாணவி கற்பகத்திற்கு அவள் படிக்க எடுத்துக் கொண்ட தமிழ் எம். ஏ., தேர்வுக்குரிய பாடத்தைச் சொல்லிக் கொடுப்பதற்காகப் பத்திரி



சந்திரசேகரன்

காசிரியன் நடராஜன் அமர்த்தப்படுகிறான். நாளடைவில் கற்பகம்-நடராஜன் இவர்களிடையில் ஏற்பட்ட அன்பு காதலாக மாறுகின்றது. ஆனால் இதை ஒருவர்க்கொருவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. நடராஜனின் இளமையின் அழகில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த தமிழாசிரியை மங்களம் நடராஜனைத் தன் வசப்படுத்த முயற்சிக்கிறாள். முயற்சி வீணானதால் ஆத்திரங்கொண்ட அவள் கற்பகத்தையும் நடராஜனையும் பிரிக்கச் சூழ்ச்சி செய்கிறாள். அவள் சூழ்ச்சியின் விளைவாக சந்திரசேகரன் என்ற ஒரு ஐ. சி. எஸ். இளைஞனைக் கற்பகம் மணக்க நேரிடுகிறது. மணம் முடிந்த மறுநாள் கற்பகமும் நடராஜனும் தோட்டத்தில் சந்தித்துத் தங்கள் உள்ள உணர்ச்சிகளை யெல்லாம் வெளிப்படுத்துகிறார்கள். மறைவிலிருந்து அவர்கள் பேச்சைக் கேட்ட சந்திரசேகரன் முதலில் ஆத்திரம் அடைகிறான். "உயிருக்கு நாயகன் நீங்கள், உடலுக்கு நாயகராக வேறொருவர் ஏற்பட்டுவிட்டார்" என்று நடராஜனைப் பார்த்துக் கற்பகம் கூறுகிறாள். அவர்கள் பேச்சு முழுவதையும் கேட்ட சந்திரசேகரன் முடிவில் அவர்களின் தூய காதலையும் நல்லொழுக்கத்தையும் கண்டு, இத்தகைய உண்மைக் காதலர்களின் வாழ்வில் தான் குறுககிட்டதை எண்ணி வருந்தி நடராஜனுடன் அவளை வாழ்க்கை நடத்துமாறு கூறுகின்றான். ஆனால் கற்பகம் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக்கவில்லை. போலிக் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற தவறான எண்ணமே இதற்குக் காரணம். முடிவாக வெளியுலகத்திற்குக் கணவன் மனைவி போலவும், தனி வாழ்க்கையில் உடன் பிறந்தார் போலவும் வாழ்க்கை நடத்துவதென்று சந்திரசேகரனும் கற்பகமும் முடிவு கட்டுகிறார்கள்.

கதையின் முடிவைத்தான் பலர் நம்பமாட்டார்கள். இளங் காதலர் இப்படியும் தங்கள் இன்பவாழ்க்கையை இழக்கத்



கற்பகம்

துணிவார்களா என்ற ஐயம் ஏற்படத்தான் செய்யும்.

நடராஜனாக வரும டி.கே. சண்முகம் அவர்களின் உணர்ச்சி ததும்பும் நடிப்பைக் காணும் போது உண்மையிலேயே நமக்கு மயிர்க்கூச்செறிகிறது! கற்பகத்திற்குத் திருமணம் என்ற செய்தி கேட்டு மூர்ச்சையடைந்து விழும் போதும், பின்பு நடைப்பிணமாய் உலவும் போதும், தோட்டத்தில் கற்பகத்தைச் சந்தித்துப் பேசும் போதும், உதகமண்டலம் செல்லும் கற்பகத்திற்கு விடை கொடுக்கும போதும் திரு. சண்முகத்தின் நடிப்புத்திறன் வெளியாகிறது.

நடராஜனைச் சந்திக்கும் போதும பிரியும் போதும் திரௌபதியின் உருக்கமான நடிப்புக் கண்டு நம கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழுகின்றது!



வீராச்சாமி

இந்துமதம் வளர்ந்த கதை!

2500 வருஷங்களுக்கு முன் தோன்றிய புத்தமதத்தின் ஜனத்தொகை 60 கோடி. 1944 வருஷங்களுக்கு முன் தோன்றிய கிறிஸ்து மதத்தின் ஜனத்தொகை 50 கோடி. 1350 வருஷங்களுக்கு முன் தோன்றிய முகம்மதிய மதத்தின் ஜனத்தொகை 30 கோடி. ஆனால் 200 கோடி வருஷங்களுக்கு முன் தோன்றிய ஹிந்து மதத்தின் ஜனத்தொகை கேவலம் 26 கோடி தான்.

—வானவில் நாடகம்

சந்திரசேகரனாகத் தோன்றும் திரு. பகவதியின் நடிப்பு, இளங்காதலர் வாழ்வில் தான் இடையூறாகப் புகுந்ததை நினைத்தும் வருந்தும கட்டத்தில் உச்சநிலை அடைகிறது. கல்லூரியில் வேலைபார்க்கும் வீராச்சாமியும் கனியம்மாவும் சரியான ஜோடி. கனியம்மாவாக வருவது கருப்பையா என்று தெரியாமல் ஏமாந்து போகிறார்கள் நாடகம் பார்ப்போர்! தமிழாசிரியையாக வரும சீதாராமன் தன் பாகத்தை உணர்ந்து நடிக்கிறார். தமிழாசிரியர் இலக்குமணப் பிள்ளைக்குப் பாரதியாரைப் போல வேஷமணிவித்து விட்டிருக்கிறார்கள். "பட்டணம் பறிபோகாமல் பார்த்துக்கொள்ளப்பா" என்று அவர் கூறும் சொற்கள் உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குகின்றன.

பாடல்கள் இசைநயத்துடன் அமைந்துள்ளன. "உயிரோவியமே என் ஜீவியமே" என்று நாடகத் துவக்கத்தில் பாடும் பாடல் ஒன்றே அதற்கு நல்ல சான்றாகும். "பறிகொடுக்காதே தமிழா" என்று சண்

முகம் பாடும் பாட்டு "சென்னை நகரம்" பற்றிய பிரச்னைக்கு முடிவு கூறுவதாக விளங்குகிறது. பாடல்கள் தோழர் கு. சா. கி. அவர்களுக்கு வெற்றியளித்திருக்கின்றன.

கற்பகத்தை எண்ணி மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் நடராஜனின் நெஞ்சில் அவள் உருவம் பதிந்திருக்கும் காட்சியை மிகச் சாமர்த்தியமாகக் காட்டுகிறார்கள்.

கற்பகம் எழுதிய கடிதத்தைப் பெரிதாக்கிக் காட்டிக் கற்பகமே கடிதத்தில் தோன்றிக் கூறுவதாகக் காட்டும் முறையும், தற்கொலை செய்து கொள்ள அவள் நினைக்கும் போது, கிணறு, தூக்குக்கயிறு நச்சுப்புட்டி, முதலியவற்றைக் காண்பித்து அவள் நினைப்பை வெளிப்படுத்துவதும், கற்பகமும் நடராஜனும் தத்தம் வீட்டில் வருந்துவதை அடுத்தடுத்துக் காட்டும் முறையும் புதுமையான தந்திரக் காட்சிகளாகும்.

கல்லூரி ஆண்டு விழாவில் நடித்துக் காட்டப்படும் ஓரங்க நாடகத்தின கருத்தை மூலக் கதையின் முடிவுக்கு ஒப்பிட்டுக் காண்பிப்பது சாதாரண மக்கள் புரிந்து கொள்வதற்கு எளிதாக அமையவில்லை. அக்கருத்தை சேகர், கற்பகம் இவர்களின் உரையாடல்களில் சேர்த்திருக்கலாம் என்பது என் கருத்து.

உயிரோவியம், உயிருள்ள நாடகம்! டி. கே. எஸ். சகோதரர்கள் விரைவில் திரைப்படமாக்க முயற்சிப்பார்களென்று நம்புகிறேன்.

— சி. கே. ராதாகிருஷ்ணன்